
# விடுதலை வீரர்கள் ஐவர்



கழக
வெளியீடு



# விடுதலை வீரர்கள் ஐவர்

கழக வெளியீடு : கசுஉசு

# விடுதலை வீரர்கள் ஐவர்

*

தமிழகப் பொதுப்பணி அமைச்சர்

**கலைஞர் மு கருணாநிதி**

அவர்கள் தலைமையில்

திருச்சி வானொலியில் 13-8-67 இல்

நடைபெற்ற கவியரங்கில்

**கவிஞர்கள் ஐவர் வழங்கிய கவிதைகள்**

*

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.
1968

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed 1 May 1968

V21y7xM9
K8

VIDUTHALAI VEERARKAL AIVAR

Appar Achakam, Madras-1 (I-2)

# பதிப்புரை

நாட்டு விடுதலைக் குழைத்த வீரர்களின் வரலாறுகளை மக்களிடையே பரப்பி, அதன்மூலம் மேலும் பல ஆற்றல் மிக்கவர்கள் தோன்றுமாறு செய்தல் அறிவுடையோர் கடன். அவ்வகையில் நல்லறிஞர் பலர் எழுதிய விடுதலை வீரர்களின் வரலாறுகளை நம் கழகம் முன்னரே வெளியிட்டுள்ளது.

இத்தகைய வரலாறுகள் உரைநடையில் மட்டுமன்றி உணர்ச்சியூட்டத்தக்க கவிதைகளாகவும் அமையுமாயின் அவை மிக்க பயன் தருவனவாகும் என்பது எமது எண்ணம்.

அண்மையில் திருச்சி வானொலி நிலையத்தில் கட்டபொம்மன், மருதுபாண்டியன், பாரதியார், வ.வே.சு. ஐயர், வ.உ. சிதம்பரனார் ஆகிய தமிழகத்தின் தலைசிறந்த விடுதலை வீரர் ஐவரின் வரலாறுகள் பற்றிய கவியரங்கம் நடைபெற்றது. தமிழகப் பொதுப்பணி அமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியவர்கள் அக்கவியரங்கத்திற்குத் தலைமை தாங்கிச் சிறப்புற நடத்தினர்.

முறையே கவிஞர்கள் விடுதலை வீரர்களின் வரலாறுகளைத் தமக்கேயுரித்தான மிடுக்கு நடையில் இனிய - எளிய தமிழில் கவிதை மாரி பொழிந்துள்ளனர். கவிஞர்களை அறிமுகப்படுத்து முறையிலும், வரலாறுகட்குத் தோற்றுவாய் செய்யு முறையிலும் கலைஞர் கருணாநிதி யவர்கள் தமது தலைமை உரையைக் கவிதையாகவே பொழிந்துள்ளது அனைவரும் வியந்து பாராட்டத் தக்கது.

இத்தகு சீரிய கருத்தரங்கினை வானொலி மூலம் கேட்டு மகிழ்ந்த யாம் இதனைத் தொகுத்து நல்லதொரு நூல்வடிவாக்கின் இது நாட்டு மக்கட்குப் பெரிதும் பயன்படும் நூலாய் அமையும் எனக் கருதினோம்

எமது விழைவினைக் கலைஞர் கருணாநிதி அவர்கட்கும் பிற கவிஞர்கட்கும் தெரியப்படுத்தினோம். கலைஞர் அவர்களும், கவிஞர்கள் திருச்சிற்றம்பலக் கவிராயர், திரு. தி. கு. நடராசன், எம்.ஏ., பி.டி., கவிஞர் முருகு சுந்தரம், திரு. அப்துல் ரகுமான், புலவர் திரு. இளஞ்செழியன் ஆகியோரும் மனமுவந்து எமது கருத்துக்கு இசைவு தெரிவித்தனர். அவர்கட்குத் தனித்தனியே எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இக் கவியரங்க நிகழ்ச்சிகளைத் தொகுத்து வெளியிட இசைவு தந்த திருச்சி வானொலி நிலையத்தார்க்கு என்றும் எமது நன்றி உரித்தாகும்.


வானொலியில் நிகழ்ந்த இக்கவியரங்கம் நடமாடும் கவியரங்கமாகத் திகழ இந்நூல் பயன்படுமெனக் கருதுகிறோம். தமிழக மாந்தர் இதனை ஏற்றுப் போற்றிச் சுவையும் பயனும் பெற்று மகிழ்வார்களாக. இதனைத் தொடர்ந்து இவ்வரிசையில் வரவிருக்கும் கவிதை நூல்களைத் தமிழன்பர்கள் வரவேற்றுப் போற்றுவார்களென நம்புகிறோம்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்




தமிழகப் பொதுப்பணி அமைச்சர்


மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்




திரு. ரகுநாதன்
(திருச்சிற்றம்பலக் கவிராயர்)



திரு. தி. கு. நடராசன்
எம். ஏ., பி. டி.




திரு. தி. முருகுசுந்தரம்
எம். ஏ.



திரு. அப்துல் ரகுமான்
எம். ஏ.

புலவர்
திரு. இளஞ்செழியன்.



தமிழகப் பொதுப்பணி அமைச்சர்

## மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி

அரசியல் உலகில் அறிஞர் அண்ணா அவர்களின் அருமைத் தம்பியர்களுள் ஒருவரெனக் கருதப்படும் கலைஞர் மு. கருணாநிதியவர்கள் 1924இல் திருவாரூரிற் பிறந்தார். மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் பள்ளி யிறுதிவரை பயின்றார். இளமையிலேயே மொழிப்பற்று - நாட்டுப்பற்று - இனப்பற்று மிக்குடையோராய்த் திகழ்ந்தார். பெரியார் அவர்களையும், அறிஞர் அண்ணா அவர்களையும் தமக்கு வழிகாட்டியாகக் கொண்டு முறையே சமுதாய சீர்திருத்தம் அரசியல் ஆகிய துறைகளில் அயராது பாடுபட்டார். இந்தி எதிர்ப்பு, கல்லக்குடிப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் என்ப பல போராட்டங்களில் ஈடுபட்டுப் பலமுறை சிறை ஒறுப்புக்களுக்கு ஆட்பட்டு இவர் பட்ட இன்னல்கள் அளப்பில.

பேச்சாற்றல், எழுத்தாற்றல், கவிதைபுனையும் ஆற்றல், நடிப்பாற்றல் ஆகியன ஒருங்கே கைவரப் பெற்ற இவரைத் தமிழகம் கலைஞர் என அழைத்தது மிகை அன்று. இவர் எழுதிய நாடகங்களும், திரைப்பட வசனங்களும் கலையுலகில் பெரும் புரட்சியை உண்டு பண்ணின.

தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபட்ட நாள் முதல், அஃதாவது 1957 முதல் சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து வாகை சூடிய இவர், இன்றைய தமிழக அமைச்சவையில் பொதுப்பணித் துறை அமைச்சராகப் பொருந்தும் பணி ஆற்றி வருகிறார். அத்துடன் தி. மு. கழகப் பொருளாளராகவும், கழகக் காவலர்களுள் தலையாயவராகவும் இருந்து இவர் ஆற்றிவரும் அரும் பணிகள் பல. 'முரசொலி' மூலம் இவர்தம் பணிச் சிறப்புக்களை நன்கறியலாம்.

விடுதலை வீரர்கள் பற்றிய கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கி இவர்தரும் கவிதை நலம் கண்டு களிப்போமாக.

# திருச்சிற்றம்பலக் கவிராயர்

இவர் தம் இயற்பெயர் இரகுநாதன் என்பது. இவர் 20-10-1923 இல் திருநெல்வேலியில் பிறந்தவர். பள்ளிப் படிப்பை முடித்து இந்துக் கல்லூரியில் பட்டப் படிப்புப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் அரசியலில் பற்றுக் கொண்டார். அதனால் கல்லூரிப் படிப்பை இழக்க நேர்ந்தது. தமிழ் இலக்கியங்களை விரும்பிப் படித்தார். எழுத்தாற்றல் பேச்சாற்றல்கள் கைவரப் பெற்ற இவர் சில காலம் 'தினமணி' இதழில் துணை ஆசிரியராகப் பணியாற்றினர். அக்காலத்திற்றான் இவர்தம் எழுத்தாற்றல் வெளிப்படலாயிற்று. கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் பல இவரால் இயற்றப்பட்டு மக்கள் மன்றத்தில் சிறப்புப் பெறலாயின. திரு. இரகுநாதன் அவர்கள் 1945இல் திருச்சிற்றம்பலக் கவிராயர் என்னும் புனைபெயரில் பல கவிதைகளை எழுதலானர். இவர்தம் கவிதைகள் நாட்டுப்பற்று, மொழிப் பற்று மிக்கு மிளிர்ந்தன. 'ரகுநாதன் கவிதைகள்' 'கவியரங்கக் கவிதைகள்' ஆகிய நூல்கள் இதற்குச் சான்று பகர்வனவாகும்.

மேலும் திரு. இரகுநாதன் அவர்கள் நாவல்கள், சிறுகதைகள், மொழி பெயர்ப்புக்கள் ஆக்குவதில் அருந்திறல் பெற்றவர். இவர் தமிழில் எழுதிய நாவல்கள் சிறுகதைகள் சில ரஷிய, செக், போலிஷ், ஜெர்மன் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 1946 முதல் 1956 வரை 'முல்லை,' 'சக்தி' 'சாந்தி' ஆகிய இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். தற்போது இவர் தமிழ்நாடு கலைஇலக்கியப் பெருமன்றத்தின் தலைவராகவிருந்து தமிழ்ப்பணி ஆற்றி வருகிறார். 1967இல் 'சோவியத் நாடு' அனைத்திந்திய நேரு நினைவுப் பரிசை முதன் முறையாகப் பெற்ற தமிழர் இவர். ஈண்டுக் கட்ட பொம்மன் வரலாற்றைக் கவினுறத் தருகின்றார்.

———

## திரு. தி. கு. நடராசன், எம்.ஏ., பி.டி.,

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திருவானைக்கா என்னும் ஊரில் புலவர் தி. சி. குழந்தைவேலனார்—பாக்கியலட்சுமி அம்மையார் ஆகியோரின் அருமைத் திருமகனாராகத் தோன்றியவர் திரு. நடராசன்.

இளமையிலேயே மொழிப்பற்றும், கல்வியில் ஆர்வமும் கொண்டு, கவிதைபாடும் திறனும் வாய்ந்து காணப்பட்டார். முறைப்படி தமிழ் பயின்று புலவர் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். 1961இல் எம்.ஏ. தேர்விலும் 1962 இல் பி.டி. தேர்விலும் அங்ஙனமே முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

பொதுப் பணிகளில் நாட்டம் மிக உடைய இவர் இருபதுக்கு மேற்பட்ட கழகங்களிலும் மன்றங்களிலும் பங்கு கொண்டு பணியாற்றி வருகிறார்.

வேலூர் (சேலம்) கந்தசாமிக் கண்டர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் இவர், தமிழ்நாடு, தினமணி, சுதேசமித்திரன், தமிழ்ச் செல்வி, குயில், தென்றல், முத்தாரம், முரசொலி, சைவமணி, திராவிடன், திராவிடநாடு மற்றும் பல இதழ்களில் கவிதைகள் எழுதியுள்ளார். ஈழ நாட்டு ஏடுகளிலும் இவருடைய கவிதைகள் வெளிவந்துள்ளன. திருச்சி வானொலி நிலையத்தில் இரண்டு முறை மொழி பெயர்ப்புப் பாடல்களை வழங்கியுள்ளார். இவருக்குக் 'குமுதன்' என்னும் புனை பெயருமுண்டு. ஈண்டு மருது பாண்டியன் வரலாற்றினை வண்ணத் தமிழ் ஓவியமாக — கவினுறு கவிதையாகத் தருகிறார்.

## கவிஞர் முருகு சுந்தரம்

கவிஞர் முருகு சுந்தரம் அவர்கள் திருச்செங்கோட்டில் 30-12-1930 இல் முருகேசன் - பாவாய் அம்மை ஆகியோரின் திருமகனாராகத் தோன்றியவர். முறைப்படி கல்வி பயின்று தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் (எம்.ஏ.) பட்டம் பெற்றார். தமிழ் மொழியிடமும், தமிழ் அறிஞரிடமும் மிகுந்த பற்றுடையவர். சென்னையில் கல்லூரி மாணவராக இருந்தபோது பாவேந்தர் பாரதிதாசனாரின் தொடர்பு இவருக்கு ஏற்பட்டது, பாவேந்த ரிடம் சில காலம் மாணவராக இருந்து பாடங் கேட்டார். திரு முருகு சுந்தரம் அவர்களின் கவிதை ஆற்றலுக்குப் பாவேந்தர் முக்கிய காரணரானார் எனல் பொருந்தும்.

இவரது கவிதைபுனையும் ஆற்றலுக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது பாரதியார் வரலாறு.

## திரு. அப்துல் ரகுமான்

திரு. அப்துல் ரகுமான் 9-11-1937இல் பாண்டிய நாட்டில் மதுரைமா நகரில் பிறந்தார். இவர்தம் தந்தையாரும் நூல் இயற்றும் வல்லமை கைவரப் பெற்றவர். 'மஹதி' என்ற புனை பெயரில் பல நூல்கள் எழுதியுள்ளார். தந்தை எப்படி மைந்தன் அப்படி என்பதற்கேற்ப, திரு. ரகுமானும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். மதுரை தியாகராசர் கல்லூரியில் பயின்று முதுகலைப் பட்டம் பெற்றார். இளங்கலை வகுப்பில் பயின்றகாலை மாநில முதன்மைக்காகப் பல்கலைக் கழகம் அளித்த ஜி. யு. போப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார். கல்லூரியில் பயிலும்போதே ஏடுகளில் கவிதை, சிறுகதை, கட்டுரைகள் எழுதி வந்தார். இவற்றில் பல பரிசுகளும் பெற்றிருக்கிறார். கவியரங்குகளில் பங்கேற்று அரிய கவிதைகளை அவ்வப்போது வழங்கி வருகிறார். தற்போது வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். ஈண்டு வ. வே. சு. ஐயர் வரலாற்றினை அழகு தமிழில்—இனிய கவிதையாகத் தருகின்றார்.

# புலவர் திரு. இளஞ்செழியன்

இவர் 1938ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டம் லால்குடி வட்டத்தைச் சேர்ந்த பெருவளப்பூர் என்னும் சிற்றூரில் பிறந்தார். தந்தையார் பெயர் அருணாசலம்; அன்னையார் பெயர் வெள்ளையம்மாள்.

டால்மியாபுரம் உயர்நிலைப் பள்ளியில் கல்விபயின்று பள்ளியிறுதிப் படிப்பை முடித்தார். பின்னர்க் கரந்தைப் புலவர் கல்லூரியில் சேர்ந்து பயின்று புலவரானார். பேச்சாற்றல், எழுத்தாற்றல், கவிதைபுனையும் ஆற்றல் ஆகியன ஒருங்கே கைவரப் பெற்ற இவர் தி. மு. கழகத்தின்பால் பற்றுக் கொண்டு அரசியல் பணியாற்றத் தொடங்கினார். தி. மு. கழக அரசியல் மேடைகளில் பேசுவதிலும் அரசியல், சமுதாயம் பற்றிக் கவிதைகளை எழுதுவதிலும் இவர் ஆர்வத்தோடு ஈடுபடலானார்.

தமது ஆற்றல்கட்கேற்ற பணி ஏடெழுதும் பணியே எனவும் அதுவும் தி. மு. கழகச் சார்புடைத்தாய் இருத்தலே சாலச் சிறந்ததெனவும் துணிந்த இவர் 1962இல் 'போர்க்குரல்' என்னும் தி. மு. க. கிழமை இதழ் ஒன்றைத் தொடங்கி அதன் மூலம் தமது அறிவாற்றல்கட்கு ஆக்கம் தேடினார்.

பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓரங்க நாடகப் போட்டி ஆகியவற்றில் கலந்து கொள்வதில் இவர்க்கு ஆர்வம் மிகுதி. கல்வி பயிலும் காலத்தில் இத்தகு போட்டிகளில் கலந்து கொண்டு இவர் முதற் பரிசுகளைப் பெற்றுள்ளார். இத்தகைய கவிஞர் தமிழகம் தந்த விடுதலை வீரர்கள் ஐவருள் வ. உ. சிதம்பரனார் அவர்களின் வரலாற்றினை ஈண்டுக் கவிதை வடிவில் தருகின்றார்.

# உள்ளுறை


பக்கம்

**தலைமையுரை**

—மாண்புமிகு தமிழகப் பொதுப்பணி அமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி 3

**க. கட்டபொம்மன்**

திருச்சிற்றம்பலக் கவிராயர் 5

தலைவர் உரை

**உ மருது பாண்டியன்** 14

தி. கு. நடராசன். எம்.ஏ., பி.டி. 15

தலைவர் உரை

**ங. பாரதி** 22

கவிஞர் முருகுசுந்தரம் 23

தலைவர் உரை 36

**ச. வ. வே. சு. ஐயர்**

திரு. அப்துல் ரகுமான் 37

தலைவர் உரை

**ரு. வ. உ. சிதம்பரனார்** 46

புலவர் திரு. இளஞ்செழியன் 47

தலைவர் முடிவுரை 61

# விடுதலை வீரர்கள் ஐவர்

# தலைமையுரை

தமிழகப் பொதுப்பணி அமைச்சர்,
மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள்

இமிழ்கடல் வேலித் தமிழகம் ஈன்ற
என்னுயிர் அண்ணன் அன்னையர் தந்தையர்
பொன்னொளிச் சோதரர் புகழ்மிகு பாவலர்
கண்மணித் தமிழின் காவலர் யாவரும்
இற்றைத் திருநாள் ஏற்பீர், வணக்கம்.

ஆகா......
சேரர் வாழ்ந்த சிறப்பிடம் எங்கே?
வீரர் பாண்டியர் அரசேன் கவிழ்ந்தது?
சோழர் உலவிய சோர்விலா நாட்டில்
கோழைக் கொள்கை குவிந்த தெவ்விதம்?
வெடித்தன வினாக்கள் வெதும்பிய மனத்தில்
குடித்திடுவோம் உயிர் கொடுத்திடுக நாட்டை
விடுதலை வேண்டா எனும் உபதேசம்
நரிகளின் ஊளை.

நாட்டு வெறி பிடித்த காளைகளே
கிலிபிடித்த மனிதர்களைக் கிறி எறியுங்கள்
புலிவாழ்வின் உச்சியிலே புதுமைதனைப்
[பொறித்திடுவோம்
என்று சிலிர்த்துப் பொங்கி எழுந்த
தமிழகம் தந்த விடுதலை மறவர்
கமழ்மணப் பாவில் மீண்டும் பிறந்திட
வானொலி நிலையம் வழங்கிய அழைப்பால்
வந்துளர் தாங்கள், தலைவர் நாளும்

விழிகளில் வீரம் சிரித்திடும் தமிழர்
விடுதலை கீதம் பாடிய கதையைக்
கவிகளின் மொழியில் கேட்டிட எழுவோம்
கண்களில் ஒத்திக் கால்மலர் தொழுவோம்

முதலில்......
முடக்கடா விடுதலை ஆர்வம் என்றார்
அடக்கடா சுதந்திர அனலை என்றார்
அவரை எதிர்த்து,
முழக்கடா முரசமென்று அதிர்ந்திட்ட சிங்கஏறு
சழக்கரால் சாவில்வீழ்ந்த சரித்திரம் கேட்டிடுவோம்

வானம் பொழியுது பூமி விளையுது
மன்னவன் காணிக்கை ஏதுக் கடா
ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை
மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று

இப்படிக்
கனல் கொட்டும் பெருமூச்சு
கட்டபொம்மன் உயிர்மூச்சு — முழக்
கயிற்றினிலே ஆறியதால்
கயத்தாறுத் தலம் என்போம்
அத்தலத்து வரலாற்றை
அழகு திருச் சிற்றம்பலர்
தருகின்றார், அள்ளி உண்போம்.

# க. கட்டபொம்மன்

[திருச்சிற்றம்பலக் கவிராயர்]

## 1

தாயகத்தின் விடுதலைக்காய்த் தலைகொடுத்துப் புகழ்காத்த
நாயகரைப் போற்றிசெய நல்லதொரு கவியரங்கைக்
கூட்டுவித்த வானொலியே! கூடிவந்த நல்லவரே!
பாட்டுச் சுவைபடைக்கும் பாவலரே! அவைத்தலைவ!
அவைத்தலைவர் முன்னிலையில் அரங்கேறும் கவிதைகளைச்
செவிமடுத்துக் கேட்டுவக்கும் செந்தமிழ்நன் னாட்டோரே!

உமக்கெல்லாம்—
சிற்றம் பலத்தான்யான் செய்தேன் பல வணக்கம்;
மற்றினியான் கட்டபொம்மன் வரலாற்று மகத்துவத்தைப்
பற்றிச் சிலவார்த்தை பகரத் தொடங்குகிறேன்.

இற்றைத் தினத்துக்கு இருநூறு ஆண்டுகட்குச்
சற்றேறக் குறைவான சமயத்தே, நம்மருமைப்
பாரதமாம் இந்நாட்டில் பாராண்ட மன்னவர்கள்
வேரதிரத் தமக்குள்ளே வேண்டாப் பகைவளர்த்து,
சூழ்ச்சி பலவிளைத்து, சோதரரைச் சோதரரே
வீழ்ச்சியுறச் செய்துவந்த வெய்யதொரு வினைப்பயனால்,
ஆறு யிரம்மைல்கட் கப்பால் இருந்துவந்த
சோரர்குலம் இந்நாட்டைச் சூழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும்
ஆளாக்கி நம்மையெலாம் அடிமைகொண்ட அந்நாளில்
தோளுயர்த்தித் தாயகத்தின் சுதந்தரத்தைக்
காப்பதற்காய்

வாளெடுத்துப் போர்புரிந்து வரலாற்றுப் பாதையினில்
மாளாப் புகழ்சுமந்த மாவீரர் எத்தனையோ?

என்றாலும்—
அன்னவர்கள் தமக்குள்ளே அரவான் பலிபோலே
முன்னம்தன் னுயிர்கொடுத்து முதற்போர் தொடுத்திட்ட
மன்னவனும் தமிழ்த்தாயின் மணிவயிறு பெற்றெடுத்த
தென்னவனும் கட்டபொம்மே என்றுசொலத்
தேவையுண்டோ?

அன்னவன்தான் —
திக்கெட்டும் புகழ்வளர்க்கும் திருநெல்லைச் சீமையதன்
பக்கத்தே வடகிழக்கில், பாஞ்சாலங் குறிச்சியினில்,
சக்கம்மா தேவியவள் சந்நிதிக்கே அல்லாமல்
திக்கெட்டும் மானிடர்க்குச் சிரம்தாழ்த்தி அறியாமல்,
பேச்சில் தடுமாறிப் பேசிடினும், கைவாளின்
வீச்சில் பகைவரையே தடுமாறி விழவைக்கும்
ஊமைத் துரையோடும், உலையாத பெருவீர
மாமன் புலிக்குத்தி நாயக்கர் தம்மோடும்,
மறக்குலத்தில் பிறப்பெடுத்து மன்னவன்றன் ஆதரவில்
திருக்குமரன் போல்வளர்ந்து சிறந்திட்ட மாவீரன்
வெள்ளையனும், மந்திரியாய் வீற்றிருந்த தானாதிப்
பிள்ளையனும் பக்கலிலே பிரியாத் துணையிருக்க,
கொள்ளையரும் புல்லர்களும் குலைநடுங்க, மாற்றாரின்
உள்ளம் நடுநடுங்க, ஊரெல்லாம் தலைவணங்க,
கொட்டிவைத்த தானியத்தைக் குருவியுமே கொத்தாமல்,
கட்டிவெல்லம் வைத்தாலும் கட்டெறும்பு மொய்க்காமல்
பாஞ்சைப் பதியரசைப் பாலித்து, மக்கள்தமை
வாஞ்சையுடன் தாளண்டு வருகின்ற நன்னாளில்—

## 2

(வேறு)

சந்தைச் சரக்கினைக் கொண்டுவந்து மன்னர்
சந்நிதி யில்தவம் தான்கிடந்து
இந்தச் சரக்கினை விற்றுமு தல்செய
இடந்தரு வீரெனக் கோரிநின்று

முந்தி விரித்துநம் நாட்டினில் வாணிப
மூட்டை யவிழ்த்துக் கடை பரப்பிச்
சந்தியில் நின்றப றங்கியர் நம்மவர்
சச்சர வால்மனம் தான் துணிந்தார்.

அப்பம் பகிர்ந்து கொடுக்கவந்த அந்த
ஆதிக்கு ரங்கினைப் போற் புகுந்து
செப்பிடு வித்தை பலபுரிந் தார்; இந்தத்
தேசத்தின் ஒற்றுமை சீர்குலைத்தார்.

ஒண்டுக் குடித்தனம் வந்தவன் வீட்டினை
ஒத்திக்கு வைத்திடும் விந்தையைப்போல்
அண்டிப் பிழைத்திட வந்தவர் இந்திய
ஆட்சி யுரிமையைப் பற்றி விட்டார்.

வாணிபம் செய்திட வந்தவர் நாடிதன்
வாரீ சுரிமையைப் பெற்ற வர்போல்
காணியும் பூமியும் தம்மதென்றார்; கிஸ்தி
கட்டவும் வேண்டுமென் றாணையிட்டார்.

இப்படி யாகநம் இந்திய பூமியை
ஏப்பங்கள் விட்டு விழுங்கியவர்
கப்பங்கள் கட்டிட வேண்டுமென்று பாஞ்சைக்
காவலன் தன்னையும் கேட்டு விட்டார்.

## 3

(வேறு)

கப்பமென்ற சொல்கேட்டுக் காதில் ஊழிக்
கனல்புகுந்தாற் போல்துடித்தான்; கண்ணில் செந்தீ
கொப்பளிக்கக் கொதித் தெழுந்தான்; குலவை யிட்டான்;
கும்பினியான் தனைநோக்கிக் குமுற லானான்:

"கப்பமென்று கேட்டிட்டாய்? நாளும் எங்கள்
காடுகளை ஏர்பூட்டிக் கழனி யாக்கிச்
செப்பரிய பாடுபட்டு, வியர்வை சிந்திச்
செந்நெல்லும் தானியமும் விளைத்தோர் உன்றன்
முப்பாட்டன் பரம்பரையா? அன்றேல் நீதான்
முதுகொடியப் பாடுபட்ட துண்டா? எங்கள்
அப்பாணை சொல்கின்றேன்! கப்பம் என்றே
அரைக்காசும் உன்றனுக்கு அளிக்க மாட்டோம்!

"உப்பிட்ட வீட்டுக்கே கெண்டி தூக்கும்
உலுத்தரைப்போல் உறவாடி எங்கள் நாட்டை
எப்படியோ எத்துசித்து வித்தை செய்தே
ஏமாற்றிப் பறித்திட்ட திமிரால், கூலிச்
சிப்பாய்கள் பலமுண்டு, காலை நக்கிச்
சேவிக்கும் அடியாட்கள் உண்டு, ஓட்டைத்
துப்பாக்கித் துணையுண்டு என்னும் தெம்பால்,
துணிந்தென்னைக் கப்பமெனக் கேட்டாய் அன்றோ?

"படைபலத்தால் எமையடக்கி ஆள வெண்ணும்
பறங்கியரே! ஒருவார்த்தை: பாஞ்சை என்றன்
குடைநிழலில் வாழுமட்டும், உடம்பில் சீவன்
குடிகொண் டிருக்குமட்டும், மானத் தோடு

நடைபோட்டுத் தலைநிமிர்ந்து நிற்போ மல்லால்,
நயவஞ்சக் காரருக்கெம் பாஞ்சை மண்ணின்
உடைமரத்து நிழல்தானும் ஒதுங்கத் தாரோம்;
உயிர்கொடுத்துப் புகழ்காப்போம்; கப்பம் கட்டோம்!''

## 4

(வேறு)

இவ்வுரை கேட்டதும் கும்பினி யான்இனி
ஏதும் வழியிலை என்றுணர்ந்தே
செவ்வி மிகுந்திடும் பாஞ்சை யதிபனைச்
சிறைபி டிக்கவும் துணிந்து விட்டான்.

கும்பினிப் பட்டாளம் சூழ்ந்துவரப் புலிக்
குகைக்குள் சிக்கிய கம்பளத்தான்
தம்பி துணையொடும் வாளின் பலத்தொடும்
தப்பித்து நாடு திரும்பி வந்தான்.

நாடு திரும்பிய கட்டபொம்மன் கோட்டை
நாலு புறமும் பலப்படுத்தித்
தேடிவரும் பகை யோடு பொருதிடும்
தேதியை நோக்கிக் காத்திருந்தான்.

ஆண்பிள்ளை என்றுபி றந்தவர் யாவரும்
ஆயுதந் தாங்கித் துடிதுடிக்க,
சாண்பிள்ளை யாயினும் சல்லடம் கட்டியோர்
சன்னதங் கண்டு குதிகுதிக்க

தொண்டு கிழவரும் தோள் புடைக்க,அவர்
தொங்கிய மீசை கறுகறுக்க,
பண்டைய வாலிபம் மீண்டது போலவர்
பாலாக் கம்பினைத் தான்சுழற்ற,

ஏரைப் பிடித்த கரங்களில் வல்லயம்
ஈட்டி முனைகள் பளபளக்க,
சோறு படைத்திடும் மென்கரமும் ஒரு
சூரிக் கத்தியைத் தாங்கிநிற்க,

தாலேலம் பாடிடும் தாயர் பகைவருக்
காலோலம் பாடிக் கவண்சுழற்ற,
வாலைக் குமரியர் காதல் பரிசமாய்
நாலு தலைகளைக் கோரி நிற்க,

தொட்டுத் தழுவிய பொற்கரமும் யுத்தக்
கொட்டு முழக்கினைக் கேட்டவுடன்
கட்டிய மாமன் மகன்கரத்தில் வீரக்
கங்கணக் காப்புகள் கட்டிவிட,

தீட்டிய வாள்முனை தீப்பறக்க, போரைத்
தேடிய தோள்கள் தினவெடுக்க,
நாட்டினர் யாவரும் படைதிரளப் பகை
மூட்டிய வெள்ளையன் போர்தொடுத்தான்

## 5

(வேறு)

கும்பினியான் பீரங்கி குண்டுமழை பொழிந்தாலும்
கம்பளத்தார் போர்வீரம் கடுகளவும் குன்றவில்லை!
வானத்தை இருளாக்கி மண்டிவரும் கரும்புகையில்
மானத்தில் தலைசிறந்த வீரர்புகழ் மங்கவில்லை!
தோட்டாக்கள் உடலத்தைத் தும்புதும்பாய்ப் பிய்த்தாலும்
நாட்டாரின் தனிவீரம் நைந்துபட்டுப் போகவில்லை!
வேல்பிடித்த கரமறுந்து வீழ்ந்தாலும், வேற்றுவரின்
கால்பிடித்துச் சரணடைய யாரும் கருதவில்லை!

சேனை பலமெல்லாம் சிதறுண்டு போனாலும்
மானபி மானம்மட்டும் மண்ணைவிட்டு நீங்கவில்லை!
ஆனாலும்—
கோட்டை இடிந்ததனால், கொத்தளங்கள் சாய்ந்ததனால்,
போட்டிருந்த திட்டமெலாம் பொடியாகிப் போனதனால்,
நாட்டைவிட்டு வெளியேறி நயவஞ்சக் காரர்தமை
ஓட்டவழி பார்த்திருக்கும் உற்றதொரு வேளையிலே,
வேற்றுவர்தம் ஆட்சிக்கு வெற்றிலைகள் வைத்தழைத்து
சாற்றுக் கவிபாடிச் சலாமிட்ட பேர்வழிகள்,
ஆங்கிலர்தம் சூழ்ச்சிகளை ஆதரித்து அன்னவரைத்
தாங்கிப் பிடித்துமிகத் தரங்கெட்டுப் போனவர்கள்,
பெற்றெடுத்த தாயவளைப் பிறனொருவன் தொட்டிழுக்கச்
சற்றும் அதையெதிர்க்கும் தன்மையற்றுப் போனவர்கள்,
நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்தில்
கொண்ட கருவதுவே குலத்தைக் கெடுப்பதுபோல்
காட்டிக் கொடுத்ததனால் கட்டபொம்மன் பிடிபட்டான்!
வேட்டை கிடைத்ததென்று வெள்ளையரும் மனமகிழ்ந்தார்.

## 6

(வேறு)

கட்டபொம்மன் பிடிபட்டான் என்னக் கேட்டுக்
  களிப்படைந்த கும்பினியான், 'நாயை யேனும்
சுட்டுவிட வேண்டுமெனில், வெறிநாய் என்றே
  சொல்லிவிட்டுச் சுடவேண்டும்' என்ற சொல்போல்,
திட்டமிட்டுச் சதிசெய்து, கட்ட பொம்மன்
  செய்திட்ட குற்றங்கள் என்றே நீளப்
பட்டியலும் தயாரித்துக் கயத்தா றென்னும்
  பதியினிலே முகாமிட்டுப் பதிலும் கேட்டான்!

"குற்றமென்று சொல்கின்றாய்? ஆமாம். செய்த
குற்றங்கள் பலவுண்டு; வேற்றார் உம்மை
உற்றடுத்துக் கெடுக்கவந்த உலுத்தர் என்றே
உணராத தொருகுற்றம்; எங்கள் நாட்டுள்
புற்றெடுத்த கருநாகம் போலே, உம்மைப்
புகவிட்ட தொருகுற்றம்; உங்கள் கையை
முற்றவிட்டுத் தவிக்கின்ற பெரிய குற்றம்
முன்னோரும் என்னோரும் செய்த குற்றம்!

"குற்றமென்று சொல்லிவிட்டாய்? எதுதான் குற்றம்?
கும்பினியார் உமதாட்சி தன்னை, யானும்
தொற்றிவரும் நோயென்று தெளிந்து தேர்ந்து
துடைத்தெறிய முனைந்தேனே, அதுவா குற்றம்?
குற்றேவல் செய்தும்மை வாழ்த்தி, கூழைக்
கும்பிடுகள் போட்டுவர வேற்கும் ஏனைச்
சிற்றரசர் போலன்றி, மானம் பேணிச்
சீறியுமை எதிர்த்தேனே, அதுவா குற்றம்?

"குற்றந்தான் என்பாயேல், அதனை யானும்
குலவையிட்டு வரவேற்பேன்! இந்நாள் என்னை
முற்றைமுழச் சிறுகயிற்றில் தொங்க விட்டே
உயிர்பறிப்பாய் என்றாலும், இந்த மண்ணில்
பெற்றெடுக்கும் உடம்பெல்லாம் புகுவேன்! உம்மைப்
பேர்த்தெறிந்து விடுதலையைப் பெறுநாள் மட்டும்
குற்றமிதை நான்புரியத் தயங்க மாட்டேன்!
கொடிதூக்கிப் போரிடுவேன்! திண்ணம்! திண்ணம்!"

கட்டபொம்மன் சூளுரையைக் கேட்டே, நெஞ்சக்
கலக்கமுற்ற கும்பினியான் 'இவனை இன்னும்
விட்டுவைத்தால் ஆபத்தே' என்ப தோர்ந்து
வீரனையே தூக்கிட்டான்! எனினும் அந்த

மட்டில்லாப் புகழ்படைத்த வீரன் நந்தம்
  வரலாற்றில் ஏற்றிவைக்கும் சுடரே, தம்மைச்
சுட்டெரித்துச் சுடுசாம்பல் ஆக்கும் என்னும்
  சூட்சுமத்தை மட்டுமவன் உணர்ந்தா னில்லை!

ஏற்றிவைத்த அச்சுடரே பரத நாட்டின்
  இதயங்கள் எலாம்புகுந்து, எழுச்சிக் காலக்
காற்றுவர நிமிர்ந்தெழுந்து, வடவைத் தீயாய்க்
  கனன்றெழுந்து, புடைபுடைத்துக் கனன்று சீறி
வேற்றுவர்தம் ஆட்சியினை வெட்டி வீழ்த்தி
  விடுதலையைத் தந்ததன்றோ? என்றே கூறி
ஏற்றிருந்த பணிமுடிப்பேன்! அவனை எண்ணி
  இருகையும் கூப்புகின்றேன்! விடையும் கொண்டேன்

# தலைவர் உரை

செத்துவிட்டான் கட்டபொம்மன் என்றிருந்தோம் மீண்டும்
பெற்றுவிட்டார் இந்தச் சிற்றம்பலம், வாழ்க நன்று
[அவ்வழியில்
அடுத்தடுத்துப் பிள்ளைகளைப் பெறுதற்கு அன்னையர்கள்
இருக்கின்றார்.
எடுத்தணைத்து மகிழ்ந்திடவே ஆவலுடன் நிற்கின்றோம்
கெடுதலையைத் தருகின்ற அடிமை நீங்கி
விடுதலையைப் பெறுதற்கு என்மகனே
கொடு தலையை எனச்சொன்னாள் அன்னையென்று
கொடுத்து விட்டப் புலிமக்கள் மருதிருவர்
தொடுத்துவிட்ட சுதந்திரப் பூமாலையிலே மணமானார்
விடுத்துவிட்ட அம்புபோல்வேகம் காட்டி தனைவில்
பழுத்துவிட்ட சொல் எடுத்துப் பாப்புனைந்து
நடமாட விடுகின்றார் மருதிரு சோதரரை
நடராசக் கவிராயர் மிக நன்றாய்.

# உ. மருது பாண்டியன்

[தி. கு. நடராசன், எம்.ஏ., பி.டி.,
கந்தசாமிக்கண்டர் கல்லூரி, வேலூர், சேலம்.]

விடுதலைப் போரின்கண் விடுதலைப் பெற்றுப்புகழ்
படுதலைக் கொண்டோரைப் பாடுதலைத் தொழிலாக்கி
வரும்படி(க்கு) அழைத்த வானொலியே! வந்துகவி
தரும்படி கேட்டுவக்கும் தமிழ்நெஞ்சே வணங்குகிறேன்

தலைவர்

தலைகொடுத்து நமக்குவிடுதலை கொடுத்தவர் கவியரங்கில்
தலைமை கொடுப்பவரோ தமிழுக்குக் கல்லக்குடியில்
தலைகொடுத்தவர்! பொதுப்பணியில் தாயகத் தமிழுக்குத்
தலைமை கொடுத்தவர்! தன்துறையில் கொண்டதைக்
கருதிச் செயலாற்றும் "சலைஞர்" எனவுரைக்கும்
பொருளாளர்! அவருக்குப் பொன்னிமகன் வணக்கம்!

தலையாடிஇத் தமிழாடி! தாளாடி மாற்றான்
தலையாடிஓட மருதுவோ தமிழில் ஆடியவன்
போராடிப் போர்ஆடிப் புகழாடிக் கொண்டாடி
சீர்ஆடிப் போகாத சிறப்பாடி ஏற்றவன்
மார்கழிக்கும் வேர்வையும் மறம்கொழிக்க, வஞ்சித்தோர்
மார்கழிக்கும் மறவனவன்! மானத்தை மதித்தஊமைத்
துரையுடன் கொண்டிருந்த துணையுடன் வெள்ளைத்
துரைத்தனத்தைத் தூளாக்கிய தோளினத்தைக் கொண்
இத்தரை வேண்டி எதிர்த்தவர் அத்தரையோட [டவன்
சித்திரை நெருப்பென முத்திரை பொறித்தவன்

ஆ! நீயாஎன்று அதிர்ந்தவர் முன்னரங்கில்
பார்நீ இங்கெனப் பாசறைத் தலைவனாய்
ஆடி முடித்தவனை ஆடிக் கடைசியில்
பாடி வரச்சொன்னார் பாட்டைத் தொடங்குகின்றேன்.

பொங்கிவரும் புகழ்வேண்டிப் போராடும் வீரரொடு
செங்களத்துப் போரினில் சிந்திய குருதியே
சிவப்புக் கங்கையாய்ச் சீறியோட அந்தச்
சிவப்புக் கங்கையேபின் சிவகங்கை யாயிற்று.
ஊர் நிறைந்திருக்கும் உலகத்துக் கோடியெங்கும்
பேர் நிறைந்திருக்கும் படியான அவ்வூரில்,

வீர வெறியோடு வெற்றிப் பட்டயத்தை
ஈர ஓலையில் எழுதிவைத்தவர் பலருண்டு
மலைதடவும் இருதோளும் மழைதடவும் இருகரமும்
இலைதடவும் வடிவேலும் கொலைதடவும் கூர்வாளும்
கொம்பென்ற மீசையும் கொடிக்கம்ப நிலையும்
வம்பென்று வந்து வளைத்தவரின் தலைசீவ
கங்கை பின்மருவி சிவகங்கை யாகச்
செங்களம் படநின்ற சிங்கங்கள் மருதிருவர்!
அடிகட்டிப் பின்னர் முடிகொண்ட கோபுரம்போல்
கொடிகட்டி ஆண்டார்கள் குருதிக்கும் நிலத்திற்கும்
கூட்டுறவை வைத்துக் கொண்டிருக்கும் உரிமையில்
நாட்டுறவை நெஞ்சில் நாட்டிவைத்த மாவீரன்
'எங்களப்பன்' என்ற இனிமையின் பான்மையில்
கங்கைச் சீமையில் தங்கிப் பாராண்டநாள்
தென்பாண்டித் திருநாட்டின் தீரன் ஊமைத்துரை
முன்பாண்ட இடம்விட்டு முள்ளாண்ட காடுறைந்து
மண்ணாசை கொண்டு மனத்தாசை வைத்த
பொன்னாசைக் காரர்பின் போராசை கொண்டிங்கு

மண்ணளக்க வந்தவரை விண்ணளக்க வைப்பேன்
என்றுரைச இவ்வாசை என ஆசை பேசினுர்க்குத்
துணையெனத் திரண்டான் தோளிரண்டில் வீரக்
கணையத்து வைரத்தைக் கட்டிவைத்து மூண்டெழுந்தான்
துரைவந்த இடம்நோக்கித் தூளாக்க ஊமைத்
துரைவந்தான் மருதோடு துணைவந்தான் எனும்படி
வேளைவந்த தென்று வேலை வேலையிலிட்டு
வாளைச் சுழற்றுமிடம் ஆளை மாய்த்திட்டான்
பழமான இதயமும் பழம்மான நெஞ்சம்
வளமாகப் பெற்றவன் வளமாள உற்றவன்
வெள்ளை மருதென்ருலே வெள்ளையர்கள் கொண்ட
உள்ளம் தடுமாறும் உடம்பெங்கும் நடுநடுங்கும்
படி,சிவ கங்கைப் படியேறித் துணிவோடு
நடிக்க வந்தவரின் நாடகத்தை முடித்திட்டான்
மணிரத்தம் கொள்வார்முன் மனரத்தம் இழப்பதாஎன
பெண்,ரத்தம் தரவந்த பெண்ரத் தினம்வேலு
நாச்சியாரின் பார்வை நாற்றுக்கு விளைவாகிப்
பேச்சிழந்தும் வாளால் பேறிழக்க மறந்தாளு?
முத்து வடுகநாதன் முழக்கமிட்ட மறக்களத்தில்
சத்தமிட்ட ஈட்டியால் முத்தமிட்டான் பகையை!
இரும்பிடர்த் தலையார்போல் வருமிடர்க் களைந்தவன்
கிருட்டின தேவனை விரட்டியவன் போன்றவன்
குருதி குளித்திருக்கும் கொடுவாள் கண்டு
மருது சிவந்தான்! மங்கையவளும் சிவந்தாள்!
கார்வண்ணன் தான்ஆனுலும் கட்டழகன் அவளுக்கு!
போர்வண்ணன் இமயமலைப் புயவண்ணன்! எதிர்த்த
கொங்கரை விரட்டிய கோமகன் போன்றுசிவ
கங்கையைக் காத்தவன்! தம்கையை நம்பியவன்
காளையார் கோயிலைத் தாக்கிய காளையரைக்

காளையார் பாசென்று கண்டதுண்ட மாக்கிக்
காசால் அடித்தவனைக் கசையால் அடித்துஅவனைப்
பேசாச் சிற்பமாக்கிப் பேய்ச்சிரிப்பு சிரித்திருந்தான்!
விரிந்த காட்டுக்குள் வேங்கையென வாழ்ந்தவன்
சரிந்தவரை எண்ணிச் சரித்திரம் அடுக்கியவன்,
கொடியவர் துரத்தும்பூங் கொடியவள் வேலுவைத்தன்
பிடிக்குள் அடக்கிப்பகைப் பிடிக்குள் படுத்தாமல்
குண்டுக்கு வடுகநாதன் குறியான போது
திண்டுக்கல் லுக்குத்தீரன் கொண்டு வந்தான்
அம்புபாய்ந்த நெஞ்சுக்குள் அன்புபாய பகைக்
கும்பலை ஒழித்தான் கொடிமுல்லை சிரித்தாள்!

அதனால்......
சீமையில் பொருள்பெருத சீமையர்கள் மீண்டுமந்த
ஊமையின் தோழர்க்கே சீமையினைத் தந்துப்
பின்போனார்! வெள்ளைமருதோ பெருவகை உந்தப்
பின்போனான்! மண்கொள்ளப் பின்போனான் அவன்பின்
சின்னமருது வீரத்தின் சின்னம் மருதென்பான் [னே
இன்னல் களைதற்கு இணைக்கரம் போலெழுந்தான்!

அவனே!......
அறத்தின்பால் வைத்திருந்த அன்பால், பொருட்பால்
சிறப்பால்... குன்றின்பால் சேர்ந்த முருகன்பால்
காமத்துப் பால்கொண்ட காரணத்தின் பால்முப்பால்
பாமணக்கும் தமிழின்பால் பாசமுற்ற தின்பால்
குன்றைக் குடித்தவனைக் கோயிலில் குடியேற்றக்
குன்றக் குடியினில் கோயிலைக்கட் டுவித்தான்
தேனாட்சித் தமிழும் மீன்ஆட்சி அரசும்
கோனாட்சி செய்திருந்த மீனாட்சி ஆலயத்தில்
இராத் திரிக்கு விளக்கேற்றி இருஆட்சித் தீபத்தின்

இரா திரிக்கு உணவாக ஆவியூர் அளித்திட்டான்
பதிப்பித்துக் கொண்டபற் றிலேதிருக் கானத்தைப்
புதுப்பித்தான் புதுப்பித்தால் பெருந்தேர் உருட்டினன்
வீரக் கொடுவாள் விளையாடிச் சிவப்பேறிய
ஈரக் கையினல் வாரிக் கொடுத்துவந்த
மருதப்பன் நாடெங்கும் மக்களப்பன் ஆனவன்
ஒருநாள் பசியால் ஒட்டிய வயிருேடு
களைப்பால் தடுமாறி களையப்பிய முகம்வாடி
மலைப்பால் சாய்ந்தான் மலைபோல் விழுந்தான்.
கீழே விழுபவனை ஓர்கிழவி ஏழையெனக்
கூழைக் கொடுத்தாள் கூழைக் குடித்தவனே
''தாயே பெயரென்ன? ''எனத்தடுமாறிக் கேட்டானவள்
''தாயம்மாள்'' என்ருள்! ''தாய்அம்மாள் நீயே;
வாழக் கூழ்கொடுத்து வாழ வைத்தாய்
ஏழையா நீ? என்நெஞ்சே ஏழையம்மா'' என்று
பாழூரில் காத்தஉன் பழுத்த அன்பிற்குக்
கூழூர்என இவ்வூரினிக் குறிக்கட்டும் எனச்சொல்லி
எழுதிக் கொடுத்துவிட்டு ஈரத்தால் போனவனை
வழுத்தி வைத்திருக்க வையத்தில் வாழுகின்ருன்
'மருது'எனும் பெயரால்! மதுரைக்கும், கொச்சையாய்
மருதைஎன வழங்கும் மதுரச்சொல் லால்பின்னே
கமுதிக் கோட்டைக்குள் கால்வைத்த பகைவரை
அமைதிக் கோட்டைக்கு அழைத்துப் போனன்
திருப்பூ வனத்தை விரும்பியவரைச் சாவூரெனும்
திருப்பூருக் கனுப்பிவிட்டுத் தீவாளேமுத்த மிட்டுச்
சாமியென ஊரவர் சாற்றும்படி சிவகங்கைப்
பூமியில் வீற்றிருந்தான். பொழுதுகள் மாறிப்
பெருவயல் எங்கும்ஒளி பெய்கின்ற காலேயில்
சிறுவயலேத் தாக்கினர் சீறும்வய வேங்கை

கத்திமுத்த மிடக்காத் திருந்தவேளை யென்று
ஒத்திகை யாட்டத்தை ஒக்கலில் முடித்துடன்
மறவியல் களங்கண்டான் மனவயல் பிளவுண்டு
சிறுவயல் தீநாக்கின் சிறைவயல் ஆனதைக்
கண்களால் கண்டான் காணாது கண்டவனே
புண்ணாக்கி நெஞ்சைப் புரையோடும் புண்ணாக்கித்
தொண்டை மானின் தொண்டை எண்ணிச்
சண்டைக் காடானதென் பாண்டிமண் டலத்தைக்
கண்ணீரால் அவித்துக் கைகளில்முறுக் கேற்றிக்
கொண்டிருந்தான் எட்டப்பன் கூலிகளை நினைத்துக்
காளையார் கோயிலுக்குள் காளையவன் பறந்து
வாளைப் பாய்ச்சியங்கு ஆளை மாய்த்திட்டான்
உடையண்ணத் தேவரின் உடைமாற்றி விட்டங்குப்
படைகொண்ட வெள்ளையரோ பணத்தாசைக் காட்டிய
மேலூரில் மருது வாளால் சந்தித்து [தை
மேலூர்க்கே அனுப்பி வேடிக்கை காட்டினான்
வளரித்தடி கொண்டுவளைத்த போதுஉயிர் மீண்ட
கிளர்ச்சித் தீயனார் களம்போன மங்கலம்
படைகொண்டான் சங்கரப்பதிப் பாடி வீட்டை
இடைவந்த சாதி ஈனர்கள் கும்பினிக்குக்
காட்டிக் கொடுத்திருந்த கள்ளத் தனம்கண்டு
ஈட்டியால் சந்தித்தார் இருவரும் ஆனால்
வெள்ளை மருதுவோ வெள்ளையன் குண்டுக்கு
உள்ளம் கொடுத்து உடல்சாயும் நேரம்
கட்டபொம்மன் பின்னவனும் கட்டிவைத்த வனப்பைக
கொட்டி வைத்திருக்கும் குமரப்பன் சின்னவனும்
கல்லும் மண்ணும் கண்டிரங்கக் கலங்கிச்
சொல்லும் கண்ணீரின் சோகத் திரைவிளிம்பில்
சார்த்திக் கொண்டு சாமகானம் பாடுகையில்

நேர்த்தியான நேரமென நெடுவிலங்கு பூட்டினர்
கன்னித் தமிழ்ரத்தம் காய்ந்ததோ என்றே
எண்ணி எழுந்திருந்த இளையவனைக் கண்டவர்கள்
வெள்ளிக் காசுக்கு வெள்ளிப்பல் காட்டியவர்கள்
எள்ளி நகையாடி ஏளனப்பண் பாடினர்
திருப்பத்தூர் நடுவே தீரன் சின்னவனை
விருப்பத்தூர் அனுப்ப விரைவுடன் தூக்குக்
கயிற்றில் தொங்கவிட்டுக் காற்றில் மிதக்கவிட்டார்
வயிற்றில் தீவளர்த்து வந்தவனைச் சுதந்திரத்தின்
களங்காணத் துடித்த காளையினை நம்மவரே
களப்பலி யாக்கிக் களிப்படைந்தார்! அவனோ
"முள்ளால் கீறியவையும் சொல்லால் கூறியவையும்
எள்ளால் இறைத்தவையும் இருக்கட்டும்" என்றதைக்
கேட்டிருந்த தமிழ்நெஞ்சே வேங்கையைத் தூக்கில்
போட்டிருந்த தமிழ்மண்ணே போர்வாள் முனையிலே
மண்ணை மதித்துப்பின் விண்ணை மிதித்தவனை
எண்ணத்தில் வைத்திடுவாய் என்றிடுவேன் முடிப்பேன்!

——

# தலைவர் உரை

இருமருதை இங்கழைத்து வீரத்
திருமலியும் வரலாற்றைத் தந்திட்டார் நம் நண்பர்
இருமருதும் ஒரு மருதாய்ப் பிறந்திட்ட
பெரும்புலவன் பாரதியைக் காட்டுதற்கு - திரு
முருகு சுந்தரக் கவிவாணர் முனைகின்றார் கேட்போம்.
பழையநடை, பழங்கவிதை, பழந்தமிழ் நூல்
பார்த்தெழுதிப் பாரதியார் உயர்ந்தா ரில்லை
அழகொளிசேர் பாரதியார் கவிதை தன்னை
அறிந்திலதே புவியென்றால் புவிமேற் குற்றம்
களைத்தவர்க்கும் கல்லாத தமிழர்க்கும் தனிந்தபடி
[தோலுரித்துச்
சுளைத்தமிழால் கவியளித்த சுப்பிரமணிய பாரதியார்
நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடு மணக்க வந்த கற்பூரச் சொற்கோ என்றெல்லாம்
ஆடும் மயில் தமிழ் என்முன் என
ஆடவைத்த பாரதி தாசன் பாடுகின்றார்
இவரென்ன பாடுகின்றார், பார்ப்போம்.

## ௲. பாரதி

[கவிஞர் முருகுசுந்தரம்]

### நேரிசை வெண்பா

ஆரூர் அமுதே! அழகுத் தமிழ்பூட்டித்
தேரூரத் தேர்ந்த கலையரசே!—பாரில்
முரசொலிக்கும் முத்தாரப் பேச்சழகா! இங்கே
அரசிருப்பாய்! யான்பாடு வேன்.

### அறுசீர் விருத்தம்

குறும்பலாப் பழச்சுளையைக்
கொட்டுகின்ற தேனடையில்
நனைத்தோர் மந்தி

அருந்தென்று தானூட்ட
அதைக்குட்டி மறுத்ததனால்
அன்பே! நம்மூர்

நறுந்தமிழைப் போலினிக்கும்
நாவார உண்ணென்று
சொன்ன பின்னர்

விருந்துண்டு கிளைதோறும்
அக்குட்டி விளையாடும்
திருநெல் வேலிச்

சீமையிலே எட்டைநகர்ச்
சின்னசா மிக்குமுயர்
லட்சுமி யென்னும்

மாமயிற்கும் பிறந்ததமிழ்
மருக்கொழுந்தை நிலவெரிக்கும்
பாண்டி முத்தைச்

சேமமுறத் தெருவெல்லாம்
செந்தமிழை முழக்கவந்த
சிங்க ஏற்றைக்

கோமகனைப் பாரதியைப்
பெற்றதனால் விடுதலையில்
குளிக்கின் றோமே.

### எண்சீர் விருத்தம்

வளர்ந்துவரும் இளங்கன்று முதிரா முன்னர்
வாழைமரம் சாய்வதைப்போல் இளைய முல்லைக்
கொழுந்தேறிப் பந்தலிலே படரா முன்னர்க்
கொழுகொம்பு சாய்வதைப்போல், உலகம் போற்றும்
செழுந்தமிழாய்ச் செந்தமிழை ஆக்க வந்த
சிறந்ததமிழ்ப் பாரதியார் துயர் நெருப்பில்
அழுந்திமிகத் துடிதுடிக்கப் பெற்றெடுத்த
அன்னையொடு தந்தையரும் இறந்து விட்டார்.

### சிந்து

கட்டிக் கரும்பினைச் சாறெடுத்துத் — தமிழ்க்
காவியத் தேன்கலந்து — பொன்னை
வெட்டிப் பொடிசெய்து கூட்டியங்கே— காதல்
வெய்யிலில் காய வைத்தே — அன்பைக்

கொட்டிக் கலந்து பதமாக்கி — ஒரு
கோதை உருச் சமைத்து — சின்ன
சிட்டுக் குருவியின் பேச்சுக்களை — அவள்
சிந்தையிலே நிறுத்தி — அல்லி

மொட்டுப் பதித்து நிலாவெடுத்து — முக
மொன்று பொருத்தி வைத்து — மேலே
பட்டுடுத்திச் சிற்பி தட்டியுருச் — செய்யாப்
பாவை யென்றே யுரைத்துப் — பண்பில்
மட்டுப் படாத்தமிழ்ச் செல்வியென்றே — செல்லம்
மாளை மணக்க வைத்தார் — பிறர்
கட்டுக் கடங்காத பாரதியார் — காதற்
கட்டுக் கடங்கி விட்டார்.

எண்சீர் விருத்தம்

குற்ருலம் விட்டெழுந்து வைகை யாற்றின்
குளிர்புனலில் நீராடிச் சங்க மாய்ந்து
கற்றதமிழ்ப் பாவலரின் நாவி லேறிக்
களிப்பூட்டி நாடகத்தைச் செய்து பின்னர்
வெற்றித்தோள் மன்னவர்க ளாட்சி செய்யும்
வீதிதொறும் விளையாடி இயலி சைத்த
நற்றமிழ்த்தாய் முடிபுனை ந்து செங்கோ லோச்ச
நாவரசர் பாரதியைத் தேடி வந்தாள்.

சிந்து—கண்ணி

செந்தமிழ் நூல்பயின்ருர் — வடமொழி
செம்மையுறப் பயின்ருர் — கங்கை
சந்திக்கும் காசிநகர் — சென்றே
இந்திமொழி பயின்ருர்

ஷெல்லியின் பாடல்களில் — தம்
சிந்தை பறிகொடுத்தார் — பிற
நல்ல இலக்கியங்கள் — அவர்
நாளும் பயின்று வந்தார்.

அறுசீர் விருத்தம்

களித்துவந்த கள்ளுக்கும்
காதலுக்கும் விருந்துக்கும்
மக்கள் வாழ்வை
அழித்துவந்த கொடுமையினுல்
குத்துண்ட புலிபோல
ருசிய மக்கள்
விழித்தெழுந்து பெரும்புரட்சி
மேவியதால் ஜார்மன்னன்
விரிந்த மார்பில்
குளித்துவந்த குண்டுக்குக்
குன்றேறிப் பாரதியார்
வாழ்த்துரைத்தார்.

எண்சீர் விருத்தம்

கட்டாரி ஓர்புறமும் காத லித்த
காரிகையாள் மறுபுறமும் அணைத்தி ருக்கப்
பட்டாளம் பின்தொடரச் சுதந்தி ரப்போர்ப்
பறையடித்த கரிபால்டி மாஜி னிக்கும்
இட்டாலி நாட்டினிலே கொதித்தெ ழுந்த
இளையபடை வீரர்க்கும் புரட்சிப் பாட்டால்
கட்டியங்கள் கூறிநின்ருர், அப்பு ரட்சி
கட்டாய மிந்நாட்டில் தோன்று மென்ருர்.

### சிந்து — கண்ணி

உள்ளத்திலே புரட்சி — அவரை
உந்திக் கிளப்பியதால்
கள்ளத்தனம் வெறுத்தார் — பழங்
கட்டுக்க ளேயுதிர்த்தார்.
சாதி சமயங்களைப் — பேசிச்
சண்டைகள் செய்பவரை
மோதி மிதிப்ப னென்ருர் — அவர்
முகத்தில் உமிழ்வ னென்ருர்.

### வேறு

மன்னரைச் செல்வரைப் பாடி வயிற்றை
வளர்ப்பதும் வாழ்வாமோ — ஏழை
கண்ணீரைப் பாடிக் கவலைகள் தீர்வது
கவிதை யென்றுரைத்தார்.

சின்னத்தனம் மிக்க மன்னவர் நட்பைச்
சீயென் றுமிழ்ந்துவிட்டே — அவர்
சென்னை நகர்வந்து பத்திரி கைத்தொழில்
செய்து பிழைத்து வந்தார்.

### நிலைமண்டில ஆசிரியப்பா

அச்சம் விடுத்தா ரயலவர் ஆட்சியைத்
துச்சமாய் மதித்தார் தூள்தூ ளென்ருர்
மீசையை முறுக்கி மேலே யேற்றினர்
சிங்க ஏற்றைச் சிந்தையில் நிறுத்திஞர்
நெஞ்சை நிமிர்த்து நேரே பார்த்தார்

பந்துபோல் உடலும் பகைவரை யெரிக்கச்
செந்தழற் கண்களுந் தேவை யென்றார்
கொள்ளை யடித்த வெள்ளையன் சொற்களைக்
கேட்டடி பணிந்து கிடந்த மனிதரைப்
பாட்டடி கொடுத்துப் பதைக்கவைத் தாரே!

சிந்து — கண்ணி

இந்தியா என்றொரு பத்திரி கைபொறுப்
பேற்று நடத்திவந்தார் — அதில்
சொந்த மாய்ப்பற்பல கவிதைகள் கட்டுரை
சூடாய் எழுதி வந்தார்.

கண்டனப் பாடலுங் கருத்துப் படங்களுங்
காட்டிப் புரட்சி செய்தார் — அதைக்
கண்டனர் வெள்ளையர் மண்டையிடி குளிர்
காய்ச்சலுங் கொண்டு விட்டார்.

சூரத் எனுமூரில் வீரர் பலர்கூடிக்
சூழ்ந்தவோர் காங்கிரசில் — அவர்
வீரத் திலகரை நேரினிற் சந்தித்து
வீழ்ந்தவர் தாள் பணிந்தார்.

தீப்பொறி கக்குங் கருத்துக்களால் நாட்டுச்
சிங்க இளைஞர்களைத் — தட்டிக்
கூப்பிட் டெழுப்பினர் வீரர்கள் யாவருங்
கொந்தளிப் போடெழுந்தார்.

## அறுசீர் விருத்தம்

வாஊசி யென்றபெரும்
வரிப்புலியொன் றெழுந்ததனுல்
வெள்ளை ஆட்சி
யேஊசிப் போகு மென்று
நடுநடுங்கி அன்னவரைச்
சிறையி லிட்டார்
நாவீசிப் பாரதியார்
கொதித்தெழுந்தார், எரிமலைபோல்
குமுறிப் பொங்கி
ஆவேசப் பாடல்களை
ஆங்கிலப்பே ரரசஞ்ச
அடுக்கி விட்டார்.

## சிந்து — கண்ணி

வாள்பிடித் தேஅர சாண்டவர் நாங்களும்
தாள்பிடித் தாகிடப்போம் – அட
கூழ்குடித் தாலுமஞ் சாமல் எதிர்நின்று
கொண்ட பகைமுடிப் போம்

ஏழ்கட லுக்குமப் பாலுங் கடந்துசென்
றெங்கள் கலம்விடுத்தோம் – அட
ஆழ்கட லுக்குள்இறங்கித் தமிழ்முத்தை
அள்ளிக் கொணர்ந்து விற்ரேம்.

வாளுக்கும் உங்கள்கை வேலுக்கும் பீரங்கி
வண்டிக்கும் அஞ்சுவமோ ? — என்று
சூளுரைத் தஞ்சாமல் பாடித்தம் சொற்களில்
சுண்டி விட்டார் நெருப்பை

பாட்டுப் புலவர் நடத்திய இந்தியாப்
பத்திரிகை மேலே - ஆள்வோர்
நாட்டம் விழுந்ததந் நல்லிதழ் தன்னை
நசுக்க முடிவு செய்தார்

நாட்டினி லேஉயர் நாவல ராகிய
நல்லவர் பாரதியைச்—சிறைக்
கூட்டுக்குள் ளேதள்ளிப் பூட்டிட வெள்ளையர்
கூடிச் சதிபுரிந்தார்.

வேறு

புலவர் பாரதியைச்—சிறையில்
பூட்டி அடைத்து விட்டால்
கலைத் தொண்டழியு மென்றே—நண்பர்கள்
கருத்துக் கொண்டார்கள்

சிங்கப் பாவலனைப்—புதுச்
சேரிக் கனுப்பி வைத்தார்
மங்கை யர்க்கரசி—செல்லம்
மாளும் புறப்பட்டார்

வங்கப் பெருநாட்டில்—இருந்து
வந்த அரவிந்தர்
அங்கு வாழ்ந்திருந்தார்—வாவேசு
அய்யரும் இருந்தார்

வரிப்புலி பாரதியும்—இவ்
வறிஞருடன் சேர்ந்தார்
நெருப்பில் நெருப்பானார் - வாளை
நிமிர்த்துப் பிடித்து விட்டார்

வீரத் தமிழ்மறவன் - சுப்புரத்ன
வேந்தன் தன்ேனுடு
பாரதி பழகிவந்தார் – அவனுக்குப்
பாடல் பயிற்றி வந்தார்

துப்பாக்கி யின்வயிற்றில் – பீரங்கி
தோன்றுங் கதை போலச்
சிப்பாய் பாரதிக்கு – நல்லதோர்
சீடன் கிடைத்து விட்டான்.

வேறு

ஏட்டில் பரங்கியர் ஆட்சிக்கெதிராகத்
தீட்டினுர் - அம்பு பூட்டினுர்
பாட்டில் சுதந்திரத் தீயையிந் நாட்டிலே
மூட்டினுர் - அச்சம் ஓட்டினுர்

கொல்லும் பசிக்குத்தம் மெல்லுடலை இரை
யாக்கினுர் - துயர் போக்கினுர்
அல்லற் படும்போதும் ஆயிரம் பாடல்கள்
ஆக்கினுர் - புகழ் தேக்கினுர்

எல்லை கடந்துவந் தெங்குந்தொடர்ந்துசென்
றண்ணலைத் - தமிழ்க்கன்னலைத்
தொல்லைக்குள்ளாக்கிய போலீசுக்காரரால்
துன்புற்றுர் - ஒருபெண் பெற்றுர்

பாஞ்சாலியின் கதையைத் தமிழ்ப் பாட்டிலே
பாடினுர் – குதித்தாடினுர்
தீஞ்சுவைக் காவியமாய்க் கண்ணன் பாட்டினைத்
தீட்டினுர் - இசை பூட்டினுர்

கூவும் குயிலைப்போல் தாமும்பாட எண்ணிக்
கூவினர் - உளம் தாவினர்
காவிய மாய்க்குயிற் பாடலைக் கற்பனை
பண்ணினர் - புகழ் நண்ணினர்

பத்து வருடங்க ளாய்ப்புதுச் சேரியில்
பாரதி - தமிழ்ச்சாரதி
நத்திக் குடியிருந் தார்பின்னர் வேறிடம்
நாடினர் - புகல் தேடினர்.

### நேரிசை வெண்பா

அன்று மலர்ந்த அரவிந்தக் கண்ணியர்கள்
சென்ற தெருத்தோறும் சீருடையில் — நின்றுலவும்
பொன்னக ரான புதுச்சேரி விட்டுப்பின்
சென்னைவந் தார்பா ரதி.

### சந்த விருத்தம்

கொடுமுடி யெனவரும் அலைகளே
குமுறிடு குணகடற் கரையிலே
நெடுமலை பொடிபட் டதிரவே
நிலமிசை தாரகை யுதிரவே
படிமிசை எரிமலை குமுறவே
பகலவன் செந்தீ யுமிழவே
இடியெனப் பாடல்கள் பாடினர்
இடிந்தது பரங்கிய ராட்சியே !

## பஃறொடை வெண்பா

வெள்ளிக் கிழமை விரிகதிர் தங்கத்தை
அள்ளித் தெளிக்கும் அழகிய பொன்மாலை
தேனூறும் வாயால் தெவிட்டாமல் ஓர்நொடியில்
பா நூறு பாடுகின்ற பாரதியார் கோவிலுக்குச்
செல்லுவ துண்டாம்; திருவாயாற் பாட்டிசைத்தே
அள்ளுவ துண்டாம் அனைத்துயிரைக் கத்துகின்ற
காக்கை குருவி கடல்மலை தேனிலவு
நோக்கும் பொருள்களிலே தோழமை காண்பதுண்டாம்
பாட்டுச் சுவையைப் பருகுவது போலொருநாள்
கோட்டுக் களிற்றைக் கும்பிட்டுச் சென்றணைத்தார்
தெங்கங்காய் தந்து திரும்பினார் ஐயையோ
அங்கம்புண் ணாக அவரைப் புரட்டியதே!
தொட்டால் கவிதைச் சுவையூறும் நல்லுடம்பைப்
பட்டால் தமிழ்க்காதல் பற்றும் பளிங்குருவை
வானத்தை விட்டிங்கு வந்த வளர்மதியைக்
கட்டிப் பலாச்சுளையைக் காவியச் செங்கரும்பைக்
கண்ணை மணியைக் கற்கண்டைத் தேன்பாகைப்
புண்ணாகப் போட்டுப் புரட்டியதே; அவ்வுடம்பைக்
கட்டில் தனிலிட்டார் காலனைத் தம்காலால்
எட்டி மிதிக்க இவருக்கிங் காற்றலில்லை.
ஆவி பறந்ததம்மா! அன்பரசி செல்லம்மாள்
தாவி யணைத்த தளிருடல் சாய்ந்ததம்மா!
மார்பில் அணைத்த மகரயாழ் வீழ்ந்ததம்மா!
சிட்டுப் பறந்ததம்மா! சிந்தனைக் கதிரோடிப்
பட்டுத் தெறித்த பகலவன் மாய்ந்ததம்மா!
போக்கடித்த முத்தா புதிதாக வாங்கிவா ?

தீக்குளித்த வீடா திரும்ப எழுப்புதற்கே ?
ஓரா யிரமாண்டிங் கோய்ந்து கிடந்த நம்மில்
வாராது போல்வந்த மாமணியை இவ்வுலகில்
யாரே தருவா ரினி?

சிந்து

செந்தமி ழுக்கொரு
சிங்கக் கவியென
வந்தான்! வந்தான்! – பாடல்
சந்தத் தமிழினில்
சிந்தை குளிரவே
தந்தான்! தந்தான்!

பாட்டுப் பெருங்கவி
பாரதியின் புகழ்
கண்டோம்! கண்டோம்! – அவன்
பாத மலர்களை
நாம் தலைமீது
கொண்டோம்! கொண்டோம்!

‘ பாரதி ’ வரலாறு

முற்றும்

## தலைவர் உரை

நீர் வீழ்ச்சி போலன்றோ நிமிர்ந்த கவி பாரதிக்கு
பாலோச்சிப் பொழிந்து விட்டார் . நன்று நன்று.

ஒரு

நீர் வீழ்ச்சிச் சேட்டையினால்
பேரதிர்ச்சிப் பெரும்புயலைத் தமிழ்நாடு தாங்கிற்றந்தோ.
வ.வே.சு. அய்யரெனும் வாய்மைகொள் செயல்மறவர்
ஆவேச நீர்வீழ்ச்சிச் சுழலில் சிக்கி
அன்றொரு நாள் மாய்ந்து விட்டார்
சுவர் எழுப்பிச் சுதந்திரத்தை அடைத்துப் போட்டுச்
சுற்றி நின்று பாதுகாத்த அன்னியரின் படைகெடுக்க
இவர் எழுந்தார் இடையில் மறைந்தார்
இதோ மீண்டும் வருகின்றார்.
அழகொழுகும் அப்துல் ரகுமானின்
அருமை மிகு செந்தமிழால் உயிர்பெற்று.

## ச. வ. வே. சு. ஐயர்

[அப்துர் ரகுமான்]

நாடும்பேர் உந்துதலால் அந்நாள் வீரர்
நாடுவிடு தலை செய்தார்; நீயோ இந்நாள்
ஓடும்"பேர் உந்து"விடு தலைச்செய் கின்ற
உரிமை பெற்றாய்; ஆங்கிலரின் ஆட்சி தன்னைக்
கேடென்றே அகற்ற நின்றார் அவர்கள்; நீயும்
கிள்ளியெறிந்தாய் அவர்தம் எழுத்தை; நம்மை
மூடிநின்ற ஆங்கிலத்தைப் போக்கடித்து
முத்தமிழ்க்கு வரவுரைத்த அமைச்சர் ஏறே;

* * *

கல்நினைவுக் கட்டிடங்கள் காலத்தால் சாயுமெனச்
சொல் நினைவுக் கட்டிடங்கள், சுடர்மிகுந்த வீரர்க்குக்
கட்டி வருக வெனக் கட்டளைகள் உரிமையுடன்
இட்டழைத்துப் பணிசெய்ய எமையழைத்த வாளொலியே
நாட்டுத் தளைகளைய நாட்டமுற்ற தலைவர்களைப்
பாட்டுத் தளைகளுக்குள் பற்றிவந்த பாவலரே!
வீடுகளில் இருந்தபடி விடுதலைப்போர்க் காவியத்தின்
ஏடுகளைச் சுவைக்கின்ற இனியவரே! என் வணக்கம்

* * *

படுக்கவைக்கப் பட்டிருந்த நாடு - பகையின்
படைவுடைத்துக் கொண்டிருந்த காலம்
மடக்கி வைக்கப் பட்டிருந்த வீரம் — பொங்கி
மடைவுடைத்துக் கொண்டிருந்த நேரம்

அடக்கி வைக்கப்பட்டிருந்த தேசம் - அடைத்த
கடைவுடைத்துக் கொண்டிருந்த வேளை
தடுத்து வைக்கப்பட்டிருந்த மக்கள் - அடிமைத்
தடைவுடைத்துக் கொண்டிருந்த நாட்கள்

உடலெல்லாம் துடிக்கின்றபோது – அதிலே
ஓரங்கம் தூங்குவது முண்டோ ?
தடைவிலங்கு பாரதத்துக் கென்றால் - அதனைத்
தமிழகந்தான் தாங்குவது முண்டோ ?
விடுதலைப் போர்ப் படைதிரட்டி முன்னால் - நின்று
வீரவுரை தந்ததலை வர்க்குள்
சுடுநெருப்பாய் மூண்டெழுந்த ஐயர் - அந்தச்
சுடர் விளக்கின் புகழ்பாட வந்தேன்!

வெள்ளையரைக் கொள்ளையரைத் தமது சொந்த
வேட்டாலும் ஏட்டாலும் அதிரவைத்த
வெள்'ளையரே' வ. வே. சு ஐயர்; நாட்டு
வீரப்போர்க் காவியத்தின் நெருப்பெழுத்து
வெள்ளிநரை சாமிநா தையர், ஏட்டு
விடுதலைக்குப் பாடுபட்ட ஐயர்; பொங்கும்
வெள்ளவுள்ள வ. வே. சு. ஐயர், நாட்டு
விடுதலைக்குப் பாடுபட்ட வீர ஐயர்

திருவரக 'னேரி 'யிலே பிறந்து, வீரச்
செந்நெருப்புக் 'கட'லாக வாழ்ந்து பின்னர்
'அருவி'யிலே ஆயுளினை முடித்துக் கொண்ட
ஆச்சரிய வர'லாறு' கண்ட வீரர்
குருவிகளும் காக்கைகளும் தமது சொந்தக்
கூடுகளில் விடுதலையாய் வாழும் போது
துருப்பிடித்த வாளாகி எனது நாடு
தூங்குவதோ உறைக்குள்ளே என்ற ஏந்தல்

கடல்கடந்தார் வழக்குரைக்கும் கலைகடந்தார்
கவிக் கம்பன் காவி யத்துக்
கடல்கடைந்தார் அமுதெடுத்தார் ஆங்கிலராம்
அரக்கர்க்கும் கையில் தந்தார்
கடல்கடந்து வந்திங்கே கடை விரித்தோர்
கலைச்சரக்கில் கருத்தைத் தந்தார்
உடல்கடந்தார் எனினும் நம் உள்ளத்தைக்
கடக்கவில்லை உறைய லுற்றார்!

அக்கரையில் இருந்தாலும் அயல்நாட்டில்
வாழ்ந்தாலும் அன்னை மீதில்
அக்கறையாய் இருந்து வந்த 'இந்தியா
விடுதி'யிலே அங்க மானார்
சர்க்கரையா உயிரெமக்கு; சமர்க்களமா
புதிதெமக்கென் றாங்கி லேய
சர்க்காரை எதிர்த்து வந்த சாவர்க்கார்
பாசறைக்கோர் தலைவர் ஆனார்

*　　*　　*

பட்டம் பதவிக்கும் கிட்டும் உதவிக்கும்
　　பண்பை மறந்தவரை - நாட்டின்
　　அன்பைத் துறந்தவரைப் - பெரும்
பட்டியல் போட்டுப் பதைத்திடும் காலத்தில்
　　பட்டம் பெற மறுத்தார் - அந்தக்
　　கட்டத்தில் ஒன்றுரைத்தார்

ஆட்டுக்குப் புல்லைப்போல் பட்டம் எனும் பேரில்
　　அடிமைச் சாசனமா? – நாட்டில்
　　அந்நியர்க் காசனமா? – தாய்
நாட்டுக்கு வாதாட நாடி நின்றேன் பிறர்
　　கேட்டுக்கு வாதாடவோ - வயிற்றுப்
　　பாட்டுக்கு வாதாடவோ?

சட்டப் படிப்பிட்ட பட்டப் பிடிப்புக்குள்
கட்டுப் படக்குனியேன் - மானம்
வெட்டுப் படத் துணியேன் — பிறர்
துட்டப் பிடிப்பினில் கட்டப் படுந் தாயின்
துயரை ஒழிப்பேன் என்ருர் - தமது
உயிரை அளிப்பேன் என்ருர்
ஊரையே மாற்றியும் பேரையே மாற்றியும்
ஊரைஏ மாற்றியவர் — பல
பேரைஏ மாற்றியவர் - இந்தப்
பாரினில் உண்டு; தன் நாட்டினைக் காத்திடப்
பற்பல வேடமிட்டார் - இவர் போல்
விற்பனர் வேறிங்குயார்?

* * *

பெண்பற்றும் பொன்பற்றும் என்பற்ரு
இல்லையெனப் பிரிந்த போதும்
மண்பற்றைத் துறக்காத துறவியிவர்;
பிறவியிலே மறைய வர்தாம்;
பின்பற்றும் ஒற்றர்க்கும் பிடிக்க வொண்ணு
மறையவர்தாம்; பிடித்த தொண்டில்
என்பற்றுப் போனலும் என் — பற்றுப்
போய் விடுமோ? என்ற அண்ணல்

* * *

பாரசீகர் கோலத்தில் ஐயர் ஓர் நாள்
பாரீசு புறப்பட்டார் கலத்தில் அந்த
வீரசிங்கம் வைத்திருந்த பெட்டிமீது
"வீ. வீ. எஸ்" எனும் பெயரைக் கண்டோர் ஒற்றனை

"ஆரையா நீ"ரென்று தூண்டில் போட்டான்
அதற்கந்த திமிங்கலமா சிக்கும்? "நான் தான்
வீரவிக்ரம் சிங்"கென்றூர் ஐயர்; ஒற்றன்
வீரசிங்கக் குரல் கேட்ட நரியாய் ஆனுன்.

* * *

காயிதத்துப் புரட்சி செய்த பாரதியும்
அரவிந்தக் கலைஞர் தாமும்
ஆயுதத்துப் புரட்சி செய்த ஐயருடன்
அணி வகுத்தார்; அலையின் ஈர
வாயுதத்தும் புதுச்சேரி தனைப் புரட்சிச்
சேரியென மாற்றி வைத்தார்
ஓயாத எரிமலையாய் உடையாத
கடலலையாய் உழைக்க லானுர்.

பண்டுசெய்த பாரதப்போர் அணிவகுப்பும்
நெப்போல்யன் படைய மைப்பும்
கொண்டு செய்த புதுமுறையில் புரட்சிக்கோர்
நூல் தந்தார்; குலையா நெஞ்சால்
தொண்டு செய்தார்; நம் நலத்தைத் துண்டுசெய்த
அந்நியரைத் துளைப்ப தறகுக்
குண்டு செய்தார்; ஆதிக்க ஆட்சியினை
வீரத்தால் குலையச் செய்தார்.

* * *

ரத்தம் பன்னீர் நமக்கு - பெறும்
ரணம்தானே ஆபரணம் - நாம்
உத்தம விடுதலைக்கே - எங்கள்
உயிரும் விலை தருவோம் - என

ரத்தத்தில் கையெழுத்தை - இட்ட
ராணுவ இளைஞருக்கு - ஐயர்
யுத்தத் தளபதியாய் - வீர
ஆணைகள் இட்டு வந்தார்

ஆயுத ஆர்ப்பாட்டங்கள் - நமை
அடக்கிடும் ஆற்றல்களோ ?
காயித மூடிகளோ - பெரும்
கனலை மறைத்து விடும்?
பாயும் பெரும்புனலை - உப்புப்
பாறையா தடுத்து விடும்?
ஆயிரம் படைவரினும் - தூள்
ஆக்குவோம் என்றுரைத்தார்

வீட்டின் உயிர்மூச்சு - குலம்
விளக்கும் மங்கையர்கள் - நல்ல
பாட்டின் உயிர்மூச்சு — தக்க
பண்ணின் அமைப்பாகும் - ஒரு
நாட்டின் உயிர்மூச்சு - மக்கள்
நாடும் விடுதலையாம் - அது
கேட்டுப் பெறும் பிச்சையோ? - எனக்
கிளர்ச்சிக் குரல் கொடுத்தார்

சீக்கியர் போல் தமிழர் - மீண்டும்
சிங்கங்க ளாகவேண்டும் - நமைத்
தாக்கிய அந்நியரை - நாம்
தாக்கியே நீக்க வேண்டும் - தன்
நாக்கினுல் பேசலன்றிப் - பிறர்
நாக்கினுல் பேசலுண்டோ? — சொந்த
வாக்கு மொழிகளிலே — கலை
வளர்த்திட வேண்டுமென்றார்

காஞ்சிரங்காய் ஆட்சிக்குக் கல்லறையைக்
கட்டிவந்த வீரர் தம்மைப்
பூஞ்சைகளாய் மதித்துவந்த 'ஆஷ் துரையைப்
பொசுக்கிநின்ற வீரன், நாட்டு
வாஞ்சையுள்ள வாஞ்சி ஐயன் ஐயரது
பாசறையில் வளர்ந்த சிங்கம்!
நாஞ்சிலுக்கு முனைபோல நாட்டிளைஞர்
தலைமைஐயர் நடத்தி வந்தார்

உற்றாரோ டொருவீட்டில் உரையாடிக்
கொண்டிருந்தார் ஓர்நாள் ஐயர்;
பற்றுகின்ற நினைப்போடு பதுங்கி யிருந்
தார் ஒற்றர் வெளியே! அந்த
முற்றுகையின் நேரத்தில் மூண்டதொரு
அழுமோசை வீட்டுக் குள்ளே
ஒற்றர்கள் ஒதுங்கி நிற்க ஒருபாடை
நகர்ந்த தங்கே ஊருக் குள்ளே!

வீடுவிட்டுப் புறப்பட்டோர் காடுவரை
செல்லவில்லை; வெறுமை யாகக்
கூடுவிட்டுப் போனவுயிர் வந்தது போல்
பிணமெழுந்து குதித்த(து)! ஆமாம்
நாடு விட்டுக் கொடுக்காத நம்நாட்டு
வீரர்தம் சரித்தி ரத்தின்
ஏடுவிட்டுப் போகாத ஐயர்தம் சாகசத்தில்
இதுவும் ஒன்று!

பிணியாக இந்நாட்டைப் பீடித்த
அந்நியரின் பிடியை நீக்கத்
துணியாத செயலில்லை; துரத்தி வந்தோர்
கண்களிலே துணியைக் கட்ட

அணியாத கோலமில்லை; ஆற்றாத
தொண்டில்லை; அதிகாரத்தால்
தணியாத நெருப்பாம் அத் தணல் மனிதர்
தண்ணீரில் சமாதி கண்டார்!

"நீர்வீழ்ச்சி தனிலன்று நீர்வீழ்ச்சி
உற்றாலும் நின்ற கீர்த்தி
சீர்வீழ்ச்சி உற்றதில்லை பேர்வீழ்ச்சி
உற்றதில்லை சிதைந்தே இந்தப்
பார் வீழ்ச்சி உற்றாலும் பாரதத்து
மக்கள்தம் மனத்திருந்து
நீர்வீழ்ச்சி உறுவதில்லை'' எனப்புகழ
வரலாற்றில் நிலைத்து நின்றார்.

---

வ. வே. சு. அய்யர் வரலாறு

முற்றும்

## தலைவர் உரை

மூத்த குடிப்பிறந்த மூதறிஞர் வாழுகின்ற தமிழகத்தில் புகழ்
யாத்த குடிப்பிறந்த வ.வே.சு.அய்யர் கண்டோம்.

விடுதலை உறுதி

ஏற்ற குடித்தோன்றல் - எழில்
தூத்துக்குடி கடல்மீது கப்பல்விட்ட ஏந்தல்
இளஞ்செழியக் கவி நண்பர்.
இனிய தமிழ்ச் சொல்லால்
இங்கு வருகின்றார். இதயம் உரை நல்லார்.
திருவும் புகழும் சிறந்தன பிறவும்
மருவற நிற்கும்என் மாசிலா மனைவியே
என்னரும் உயிரினும் என்னுயிர் உளத்தினும்
மன்னுறப் பாதியை மகிழ்ந்துனக் களித்தேன்
பின்னுறப் பாதியைப் பெரிய நம் இதயத்தில்
தன்னடிக் களித்தேன் சத்தியம் இஃதே.

இந்த

அகவற் பாவால் அகத்தினைத் திறந்த
தகவுடை மேலோன் தமிழர் தலைவன்......

# ௫. வ. உ. சிதம்பரனார்

[புலவர் இளஞ்செழியன்]

முன்னுரை :

சூடு பறக்கும் சுவைத்தமிழில், நாட்டுமக்கள்
கேடு பறக்க, கெட்ட குணம்பறக்க
ஆடும் அழகுமயில் ஆட்டத்தைப் போலிந்த
நாடு சிறக்க நலம்பிறக்கப் பேசுகின்ற
எங்கள் கலைஞு! எழிலவாய்ந்த பெட்டகமே!
எங்கள் கவியரங்கிற் கேற்ற தலைவரென
இங்கு எழுந்தவரே! இங்கிந்த நாட்டவர்கள்
சிங்கமெனக் கொண்டாடிச் சிரம்தாழ்த்தும் மன்னவரே!
தங்கத் தமிழகத்தைத் தாங்கி நடத்தவந்த
தங்களுக்கு என்றன் தலைவணக்கம் கூறுகின்றேன்;
பாட்டிசைக்க வந்தோர், பலபேர்க்கும் அவ்வாறே
கூட்டியென் நன்றிதனைக் கூறி மகிழ்கின்றேன்.

புவியரங்கில் முதற்காலம் தோன்றுகையில் தோன்றிப்
புகழ்படைத்த தமிழ்மொழியில் சுவையெனக்குத் தோன்ற,
கவியரங்கில் நான்கலந்து கொள்வதற்கு வந்தேன்.
கப்பலோட்டி யான் புகழைச் சொல்வதற்கு வந்தேன்;
செவியரங்கில் நீங்களெல்லாம், அந்தவீர தீரச்
சிதம்பரனார் சரித்திரத்தைக் கேட்டுஉங்கள் நெஞ்சில்
சுவைபொங்க, தென்னாட்டு வீரமது பொங்க,
செந்தமிழில் ஆசைவைக்கக் கேட்டுக்கொள் கின்றேன்.

போரையே எந்தப் பொழுதும் விரும்பியிந்தப்
பாரை வியக்கவைத்த பாண்டியனும் வெள்ளிப்
பனிமலைக்குச் சென்றதனைப் பணியவைத்து வந்தவனும்

தனித்த புகழில் தழைத்தசோ ணாட்டவனும்
காணத் தகும்பெரிய களிற்றைப்போல் வந்தவர்தான்
பூணத் தகும் வீரப் புதுமையினைத் தந்தவர்தான்
வ.உ.சி. நாட்டு வரலாற்றில் நான்கண்டேன்;
சாவூருக்கு அஞ்சிச் சமரென்றால் அஞ்சுகின்ற
பேடியூர் தன்னில் பிறந்த மனிதரல்ல;
நாடு மணக்கவரும் நல்வீரம் பூக்கவரும்
கட்டபொம்மன் என்பான் அக் காலத்தில் தோன்றிவந்த
ஓட்டப் பிடாரமெனும் ஊரில் அவர்பிறந்தார்!

அந்நியர்கள் இந்நாட்டில் ஆதிக்கக்
 கொடியூன்ற அதனை இங்கே
வெந்தணலால் எரிப்பதற்கும் விடுதலைக்கு
 உழைப்பதற்கும் பிறந்து வந்தார்!
பன்னீரில் குளிப்பதற்கும் பழச்சாற்றில்
 தோய்வதற்கும் பஞ்சில் துஞ்சிக்
கன்னியரை அணைப்பதற்கும் காமத்தில்
 புரள்வதற்கும் நினைத்திடாமல்
கண்ணீரை இழப்பதற்கும் கவலைகளை
 ஏற்பதற்கும் பிறந்து வந்தார்!
விண்ணுலகம் மண்ணுலகம் இன்னபிற
 உலகமெலாம் எண்ணி எண்ணித்
தென்னாட்டுத் திலகரெனத் திலகமெனக்
 கொண்டாடப் பிறந்து வந்தார்!
மண்ணிருக்கும் காலம்வரை மறையாமல்
 இங்கிருக்கப் பிறந்து வந்தார்!

வேறு

செல்வத்தில் அவர்பிறந்தார்; அவரை வீட்டில்
செல்வமென வளர்த்தார்கள்; வளர்ந்தார்; பின்னர்

கல்விகற்ருர், படிப்படியாய் உயர லானர்;
கடைசியிலே வழக்கறிஞர் ஆனர்; பொய்யைச்
சொல்வ தென்ருல் தித்திப்புக் கனிகள் என்று
சொல்லுகின்ற வழக்கறிஞ ரிடையே, மெய்யைச்
சொல்லிவந்தார் சிதம்பரனர்; அதனல் மக்கள்
செல்வாக்கை அவர்பெற்ருர்; சிறப்பைப் பெற்ருர்.

நீதிக்கும் நேர்மைக்கும் எடுத்துக் காட்டாய்
நிலமக்கள் நடுவினிலே விளங்கி வந்த
சோதிநிலா வான சிதம்பரனர், கெட்ட
சூழ்ச்சிக்கும் வஞ்சனைக்கும் விரோதி யானர்;
ஏதம்புரி கின்றவரை எதிர்ப்பார்; எந்த
இச்சைக்கும் அவர்பணியார்; காசு வைத்த
சூதாட்ட வாழ்வவர்க்குப் பிடிக்க வில்லை;
தொல்லறத்தை, நல்லறத்தை நடத்தி வந்தார்!

கடலாடும் தூத்துக்குடி நகரில் மாற்ருர்
கவலையின்றி வாழ்வதையும் ஆள்வதையும்
உடலாட நம்மக்கள் சோர்வ டைந்தே
உணவின்றி வீழ்வதையும் மாள்வதையும்
மடமையினல் மக்களெல்லாம் அடிமைப்பட்டு
மதிப்பின்றி, மேன்மையின்றி இருந்ததையும்
கடமையினல் சிதம்பரனர் தினமும் கண்டார்;
கனலானர், மனங்கொதித்தார்; கொந்தளித்தார்!

ஏற்றத்தை அயல்நாட்டார் பெற்றிருக்க,
இந்நாட்டார் புழுதிதனில் படிந்திருக்க
மாற்றத்தை உருவாக்கத் திட்டமிட்டார்;
மளமளென வாணிகத்தில் எண்ணம் வைத்தார்;

காற்ரேட்டம் இல்லாத பழைய வீடு,
கடுகளவும் வெளிச்சமில்லா இருட்டு வீட்டில்
ஊற்றுணர்ச்சி அற்றிருந்த மக்கள் தம்மை
உணர்ச்சியினுல், எழுச்சியினுல் எழும்ப வைத்தார்;

"எழுச்சிமிக்க நாட்டோரே! பழைய நாளில்
ஈட்டிவந்த கீர்த்தியெலாம் உங்கள் கீர்த்தி!
முழுச்சினத்தைக் கொண்டவர்கள் நமது முன்ஞேர்!
முடியிழந்து ஒருநாளும் வாழ்ந்த தில்லே!
செழிப்புமிக்க நாட்டினிலே நாம்பி றந்து
சிறுமைகொண்ட பேர்களிடம் ஒடுங்க லாமா?
விழிப்புமிகுந் திடுங்களின்றே! இந்த நாட்டின்
வீரத்தைக் காட்டுதற்கு எழுந்து வாரீர்!

தாய்நாட்டுப் பொருளேயன்றி வேறு நாட்டார்
தருகின்ற பொருளேயினி வாங்கி டாதீர்!
பாய்கின்ற நதிகளிங்கு நீரைப் பாய்ச்சப்
பலபொருளும் இந்நாட்டில் விளேவதுண்டு!
ஆய்கின்ற மதிவேண்டும்; இந்த நாட்டின்
அவமானத் தைத்துடைக்கும் எண்ணம் வேண்டும்!
போய் வாங்கிடுவீர் நமதுபொருளே! நாட்டுப்
பொருள்வளப்பீர்! அருள்வளப்பீர்! என்று சொன்ஞர்..

தொழில்வளர்க்கும் சங்கத்தை வைத்தார்; நாட்டின்
தொழில் வளர்த்தார், எழில்வளர்த்தார், கப்பலோட்டும்
தொழிலின்றி தென்ஞடு செழிக்கா தென்னும்
சிந்தையினே அவர்பெற்ருர், பலரைச் சேர்த்துக்
குழுவமைத்தார்; கூட்டுமுறை தன்னில், ஆளும்
கூட்டத்தார் நடுநடுங்க, கிடுகிடுக்க
முழுத்திறமை கொண்டவராய் கப்பல் தன்னே
முழங்குகின்ற கடலில்விட்டார், வெற்றிபெற்ருர்;

நடுக்கடலில் கலம் செலுத்திப் புகழ்படைத்த
நாடிதற்குப் புதியபுகழ் இதனால் சேர்த்தார்!
அடுக்கடுக்காய் நாட்டவர்கள் கூடிவந்து
ஆதரவைப் பெருக்கிட்டார்; ஆனால் தேளின்
கொடுக்கைப்போல் ஆனார்கள் நாட்டை ஆண்டோர்
குமுற லுற்றார், சினமடைந்தார், எதிர்க்க லானார்;
தடுக்கின்ற சூழ்ச்சிபல செய்தார், எந்தத்
தடைகளுக்கும் சிதம்பரனார் அஞ்சவில்லை!

ஒப்பந்தக் கப்பல்களை, நமக்கிருந்த
உறவுகளை இல்லாமல் முறிக்க வந்தார்
இப்பாரைச் சூழ்ச்சியினால் ஆட்சி செய்தோர்!
ஏராளக் கொடுமைகளைச் செய்திட்டார்கள்!
முப்புறத்துக் கடல்களையும் அழைத்து வைத்து
முழங்கலுற்றார் சிதம்பரனார்; நாட்டு மக்கள்
கப்பல்களைச் சொந்தமாக வாங்குதற்குக்
காணிக்கை - நன்கொடைகள் கொடுத்திட்டார்கள்!

ஊணில்லை, உறக்கமில்லை, உடலில் நல்ல
உடுப்பில்லை எடுப்பில்லை, கடலிலோடும்
தோணியைப்போல் அங்குமிங்கும் துன்பப்பட்டுச்
சுதேசிக்கப்பல் தன்னையிங்கு நிலைக்க வைத்தார்;
ஆண்பிள்ளை தன்வீட்டில் சாக, அங்கே
ஆறாகத் துயர்வெள்ளம் பெருகி யோட
தூணனார் சிதம்பரனார் அசைய வில்லை
கப்பலதை வாங்கும்வரை ஓய வில்லை

சிதம்பரனார் கப்பலுடன் வந்தார் மக்கள்
சிந்தையினில் மகிழ்ச்சியினைத் தந்தார், எங்கும்
இதேபேச்சு, ஊரெல்லாம் கூடிக் கூடிச்
சிதம்பரனார் பெருமையினைப் பேசி னார்கள்!

புதுவீரம் புதுப்பெருமை! புதுவாழ் வென்று
புவிப்புலவர் கவிப்புலவர் பாரதியார்
பதித்திட்டார் மதித்திட்டார் தமது ஏட்டில்!
பாரிலுள்ள அறிஞரெல்லாம் போற்றி னார்கள்!

ஆட்சித் தரப்பினில் அதிகக் கொதிப்பு!
காட்சி புரிந்தது! கலவரம் சூழ்ந்தது!
வஞ்சகம், சூது வளர்ந்தன; ஆள்வோர்
நெஞ்சை இழந்தனர், நஞ்சை உமிழ்ந்தனர்
கட்டணக் குறைப்பு கப்பலில் செல்ல!
மட்ட நடைமுறைத் திட்டம் வகுத்தனர்
இலவச மாகவும் கப்பலில் சென்று
உலவலாம் என்று ஊரை அழைத்தனர்;
விழித்த மக்கள் வீழ்ச்சி அடைவரா?
பலித்திட வில்லை பரங்கியர் திட்டம்!
விடுதலை ஏக்கம் வீறுகொண் டெழுந்தது!
கெடுதலை மாய்க்கும் மறச்சிந்தை முளைத்தது!

விலைமதிக்க முடியாத வ. உ. சியை
விலைபேசி முடிப்பதற்குத் திட்ட மிட்டுப்
பலஆயி ரங்கொடுக்க நெருங்கி வந்தார்
பளிச்சென்று சிதம்பரனார் முகத்தில் விட்டார்!
அலைகடலின் ஒளிமுத்தை, மாணிக் கத்தை
அறியாதோர் விலைபேச நினைத்திட்டார்கள்.
தலைகொடுக்கச் சம்மதிக்கும் வீரர் தம்மை
தரமறியார் எவ்வாறு அறியக் கூடும்?

ஊருக்கும் நாட்டுக்கும் உழைக்க வந்த
உண்மையுள்ள சிதம்பரனார், நாட்டை மீட்கும்
போருக்கும் தயாரானார்; நாட்டில் அக்கப்
போர்புரிந்த மாற்றாரைப் போர் புரிந்து

வேரோடு சாய்ப்பதற்குத் திட்டமிட்டார்;
விடுதலைக்குத் தூபமிட்டார் இந்த நாட்டின்
சீர்காக்க, சிறப்புதனைக் காக்க தன்னைச்
சீர்குலைத்துக் கொள்வதற்கே திட்டமிட்டார்

கூலியினை உயர்த்தாது, வேலை வாங்கிக்
கொடுமைசெயும் முதலாளிக் கூட்டம் தன்னை
வேலியிட்டு முழக்கங்கள் முழங்கி நெஞ்சில்
விசனத்தை உண்டாக்கிப் பணிய வைத்துக்
கூலியினை உயர்த்துதற்கும், விடுமுறைகள்
கொடுப்பதற்கும் வழிசெய்தார், தொழிலாளர்கள்
பால்வார்த்துத் தம்வாழ்வில் பலனைச் சேர்த்த
பகலவனை எழில்நிலவை வணங்கினார்கள்!

கோரலெனும் தூத்துக்குடி ஆலை தன்னில்
குறைகொண்ட தொழிலாளர் ஆர்ப்பரிக்கப்
போராட்டம் தொடங்கிற்று; நாட்டை ஆண்டோர்
புத்திகெட்டார்; முதலாளி பக்கம் சேர்ந்தார்;
சேர்ந்துவந்து சண்டையிட்டார், மக்க ளெல்லாம்
சினமடைந்து தொழிலாளர் பக்கம் சேர்ந்தார்!
நேர்நின்று சிதம்பரனர் எதிர்க்க இந்த
நிலைமாறிப் புதுநிலைமை பிறந்த தங்கே!

வெள்ளையர்கள் அந்நாளில் இரவில் தங்கள்
வீடுகளில் உறங்காமல் அஞ்சி யோடி
அல்லலுற்றார், துறைமுகத்தில் உறங்கி வந்தார்!
அச்சத்தால் பொழுதெல்லாம் செத்து வந்தார்!
எல்லையின்றிக் கொதிப்படைந்த மக்கள் தம்மை
எதிர்ப்பதற்கு வழியின்றிப் பணிந்திட் டார்கள்!
சொல்லிவந்த தொழிலாளர் குறையை, அன்றே
சுலபத்தில் தீர்த்து வைத்தார்; பிழைத்துக் கொண்டார்!

பொதுமக்கள் மதித்திருக்க, நாட்டிலுள்ள
புலவரெல்லாம் கவிஞரெல்லாம் போற்றிப் பாடப்
புதுத்தெம்பைச் சிதம்பரனுர் பெற்ருர் இந்தப்
புரட்சிமிகு வேளைதனில், மதுரை மண்ணில்
உதித்தவராம் சுப்பிரமணிய சிவா என்பாரை,
உதவாதார் தமையுமிங்குத் தனது பேச்சால்
கொதிக்க வைக்கும் சிங்கத்தைக் காணப்பெற்றுக்
கூட்டாக விடுதலைப்போர் புரிந்திட்டார்கள்!

வங்காள வரிவேங்கை, பொங்கி வந்த
வடகங்கை 'விபினசந்திர பாலர்' என்பார்
இங்காள வந்தோர்க்கு எதிரி! அன்னுர்
இட்டதொரு கட்டளையை உதறலானுர்!
அங்கதனுல் சிறைப்பட்டார்; நாட்டு மக்கள்
அனைவருமே இதனுலே துக்கப்பட்டார்;
பொங்கியவர் வெளியில்வரும் நாளை, நாட்டில்
பொங்கல்விழா போல்நடத்தத் திட்ட மிட்டார்!

ஆறுதிங்கள் பறந்தோட, சிறையின் வாசல்
அப்பாலே நகர்ந்தோட வெளியில் வந்தார்!
ஆறுஎன அருவியெனத் தெற்கு நாட்டு
ஆண்சிங்க மறவரெல்லாம் கூடி வந்தார்
ஊறுசெய்தார் நாடாள்வோர், தெருவில் எந்த
ஊர்வலமும் கூட்டமதும் கூடாதென்ருர்
ஏறுஎன களிறுஎன இருந்த வீரர்
இருவரையும் தனியழைத்துத் தடைகள் சொன்னுர்!

நெல்லைநிலம் முழுவதுமே கூடி இந்த
நிலமதிரும் ஊர்வலத்தை நடத்த எங்கும்
எல்லையிலா உணர்ச்சியொன்றே கண்ட துண்டு!
எல்லோரும் வான்பிளக்க முழங்கிட் டார்கள்!

சொல்லாலே உலகத்தை ஆளவந்த
சொல்வேந்தர் சிவாவும் சிதம்பரனூர் தாமும்
பல்லா யிரவர்கூடி இருக்க, இந்தப்
பாரிஜனயே உலுக்கவைத்துப் பேசி ஞர்கள்!

ஏதங்கே ஆதிக்கம்? யாது மங்கே
எடுபட்டுப் போயிற்று! ஆட்சிக் கப்பல்
பாதித்து, வருவாய்கள் ஏதுமின்றிப்
பதைபதைத்துக் கதறியது; நமது கப்பல்
பாதையிலே வேகமுடன் பொருளை ஏற்றிப்
பலமான வருவாயில் ஓடிற் றுங்கே!
மேதினியை ஆண்டவர்கள் அதிகாரத்தை
மேல்செலுத்தத் திட்டமிட்டார் முடிவுசெய்தார்!

இதுவரைக்கும் விட்டுவைத்தார், இதற்குப் பின்னும்
இனிமேலும் விட்டுவைக்க அவர்கள் என்ன
சதியறியாப் பிறவிகளா? இருவ ரையும்
சந்திக்க வரச்சொல்லி ஆணை யிட்டார்!
சதிதெரிந்தும் விதியதனைப் புரிந்து கொண்டும்
சிதம்பரனூர் சிவாவுடனே நெல்லை சென்று
அதிகார மனைக்குள்ளே நுழைந்திட் டார்கள்!
அலறலுடன் வெளிவந்தான் 'விஞ்சு' என்பான்!

இசைபொழிந்து, மலர்பொழிந்து, அன்பு என்னும்
ஈடற்ற மழைபொழிந்தார் மக்கள்; ஆனல்
வசைபொழிந்தான்; நாய்பேய்கள் என்று சொல்லி
வாய்சலித்தான்; எம்மிடத்தில் ஒப்ப மின்றி
விசையுடனே நீவிரிங்குக் கூட்டம் தன்னில்
வெறுப்புரையை, மறுப்புரையை எங்கள் மீது
தசைச்சோர்வு இன்றிநித்தம் சலித்தி டாமல்
தாக்கியிங்குப் பேசியது ஏனே? என்ருன்!

மடமைகொண்ட மக்களினை உங்கள் பேச்சால்
மடக்கியதும் மாற்றியதும் முறையா என்ருன்;
அடிமைகொண்ட எம்மைநீ அசைக்க எண்ணல்
ஆகின்ற காரியமா? என்று கேட்டான்!
உடைமைக்கோர் கப்பல்வைத்து, அதனை யிங்கு
ஓட்டியதும் குற்றமென்ருன்; இனிமேல் நீங்கள்
தொடரலுற்ருல் காரியத்தை, தொலைப்பேன் என்ருன்;
தொடர்ந்தாரும் எதிர்த்திட்டால் சுடுவேன்'' என்ருன்!

பேச்சுக்கு எதிர்ப்பேச்சு பேசலானர்
பெருமையுள்ள சிதம்பரனர்; அஞ்ச வில்லை!
''மூச்சடங்கி விடுமெனினும் கவலை யில்லை.
முழுஇருட்டில் என்நாட்டைத் தள்ள மாட்டேன்;
ஏச்சுதனை நீசொரிய, அஞ்சு கின்ற
இழிபிறவி அல்லடா நான்! எனக்கு இங்குப்
பேச்சுரிமை தரவந்தோன் நீயா? என்றன்
பிறப்புரிமை தனைப்பறிக்க நீயார்? என்ருர்;

என்வளத்தை என்நாட்டில் நான் பெருக்க
எதற்காக நீகோபம் கொள்ளு கின்ருய்?
உன்நலத்தை நீபெருக்க இங்கு வந்த
உரிமையினைச் சொல்வாயா? எதற்கு வீணய்
என்னென்ன வோபேசு கின்ருய்? உன்னை
எள்ளளவும் நான்மதிக்க வில்லை!'' என்ருர்!
கண்சிவந்து, வாய்துடித்து அந்த வெள்ளைக்
காரனங்கே பெருஞ்சத்தம் போட லானன்!

பொறிபறந்த கண்களொடும் நெஞ்சம் தன்னில்
புகைந்தெரியும் நெருப்போடும் அவன்குலத்தான்!
குறிக்கோளின் நெஞ்சங்கள் கொஞ்சங் கூட
கோழைமையால் மனந்தளர வில்லை! பின்னர்

அரைநொடியும் கடத்தலன்றி, இரு வரையும்
அங்கேயே கைது செய்தான்;சிங்க மானோர்
சிறைக்குள்ளே போய்நுழைந்தார்; நாட்டில் உள்ளோர்
சினநெருப்பில் தீய்ந்திட்டார்; பாய்ந் திட்டார்கள்!

கடையடைப்பு. கல்வியகக் கதவ டைப்பு!
காணுகின்ற பக்கமெலாம் மனக்கொ திப்பு!
படைபடையாய் அணிவகுப்பு ஊர்வ லங்கள்!
பாட்டாளித் தோழர்களின் கட்டுக்கோப்பு!
உடைப்பு! எங்கும் பொருளழிப்பு! அங்கிருந்த
உடைமையெலாம் பொடியுப்பு! இந்த நேரம்
மடையனவன் ஆஷ்துரையின் சுடுவி ருப்பு!
மாகடலின் கொந்தளிப்பு இருந்த தங்கே!

அதற்குப்பின் சிதம்பரனார் தீர்ப்பு! ஐயோ
அதுதானே நீதிபதி தீர்ப்பு! பாவி
இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டிட் டானோ?
எவ்வாறு அப்படியோர் தீர்ப்பைச் சொன்னான்?
சதியான சதியதுதான்; நாற்ப தாண்டு
சிறைவாழ்வு என்றிட்டான்; அந்த மானில்
விதித்திருந்தான் அத்தீர்ப்பைச் சட்ட ஏடும்
விம்மிவிம்மி இதைப்பார்த்து அழுத தங்கே!

தீர்ப்பிதனைக் கண்டித்துப் பேசி டாத
தேசத்தார் யாருமில்லை! பார தியார்
ஆர்ப்பரித்தார்! “இதுதீது சூது” என்று
அழுதிட்டார்; உலகத்தில் இதுவரைக்கும்
தீர்ப்பிதுபோல் கண்டதில்லை என்று சொன்னார்!
தீர்ப்பில்லை இதன்பெயரைத் ‘தீய்ப்பு’ என்றார்;
தென்னாட்டார் கண்ணீரைப் பெருக்கிட் டார்கள்!

மேலிடத்தில் இத்தீர்ப்பு செல்ல, கொஞ்சம்
மேன்மையுள்ள மனிதரங்கு இருந்த தாலே
நாலுபத்தைக் குறைத்திட்டார்; அதனை ஆறு
ஆண்டாக்கிச் சிறுகருணை புரிந்தார், அந்தக்
கோலமதை ஏன்கேட்க நினைக்கின் றீர்கள்?
கோயம்புத்தூர் வெஞ்சிறையில் பட்ட பாட்டைக்
காலமெல்லாம் சொன்னாலும் முடிந்தி டாது!
காலமக ளும்சேர்ந்து அழுதாள் அங்கே!

கூழ்குடித்தார், கூழினையே குடித்தார்; கெட்ட
கொலைகாரர் குடியிருப்பில் அடைக்கப் பட்டார்;
சீழ்வந்த தையோ அவர்மேனி யெங்கும்;
செக்கிழுத்துச் செக்கிழுத்து மாண்டா ரய்யா!
ஏழ்கடலின் துன்பங்கள் அவரைஅங்கே
எதிர்த்துவந்து போர்புரிந்து கொன்ற தையோ!
பாழ்ங்கிணற்றில் துடித்திட்டார்; எனினும் நெஞ்சில்
பாரதத்தின் சுதந்திரத்தை மறக்க வில்லை!

சுப்பிரமணிய பாரதிஒப் பாரி வைத்தார்
சுட்டெடுத்த துயர்நெருப்பில் வேக லானார்!

"மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ?
மாதரையும் மக்களையும் வன்கண்மை யாற்பிரிந்து
காதல் இளைஞர் கருத்தழிதல் காணாயோ?"

இப்படித்தான் பாரதியார் கேட்ட ழுதார்!
இவரைப்போல் அழாதவர்கள் எவரு மில்லை!
அப்படியிந் நாடெங்கும் அழுதிருக்க
ஆவேசங் கொண்டெழுந்த இளைஞர், நாட்டில்
எப்புறமும் சீற்றமுடன் இயங்க லானார்!

எதிர்ப்பட்ட அயலாரைப் பகைக்க லானார்!
துப்பாக்கி யால்சுட்டுப் பலரை இங்குச்
சுடுகாட்டுப் பொடியாக்கி வாழ்ந்திருந்த
அப்பனவன் ஆஷ்துரையை, வாஞ்சி அய்யர்
அடிப்பதற்குக் காலத்தைப் பார்த்திருந்தார்!
வெப்பத்தைத் தணிப்பதற்கு, கோடைக்கானல்
விரும்பலுற்ற ஆஷ்துரையோ ரயிலில் சென்றான்!
தப்பிக்க ஏதுவழி? வாஞ்சி அய்யர்
தருணத்தைப் பயன்படுத்திச் சுட்டுக் கொன்றார்!
துரைமாள, தன்னையேதான் சுட்டுக் கொண்டு
துடிதுடிக்க வாஞ்சியாரும் செத்துப் போனார்!
தரைமாந்தர் எழுச்சியையும் அவர்கள் மாற்றார்
தமைநொறுக்க, தவிடாக்க நினைத்த தையும்
ஒருமுறைநாம் நினைத்திங்குப் பார்க்க, அந்த
உணர்ச்சியுள்ள சிதம்பரனார் தெரிவார்; அன்பு
முறைவழியே அவர்நோக்கம் என்றிட்டாலும்
மூண்டெழுந்த தீயையவர் என்ன செய்வார்?

தமிழ்நாடு தந்திட்ட விடுதலைப் போர்
தங்கங்கள் பலவற்றுள், சிதம்பரம் தான்
கமழ்கின்ற மல்லிகைப்பூ!, அவர்க்கு ஈடாய்
காட்டுதற்கு இனுமொருவர் பிறக்க வில்லை!
உமிழ்கின்ற நஞ்சினிலும் அன்பைக் கண்டார்!
உயர்பண்பு ஒன்றினையே மனத்தில் கொண்டார்
தமிழ்க்கவிஞர் பாரதியும் சிவாவும் வீரத்
தலைமுறையைத் தோற்றுவிக்க நினைத்த நாளில்

சிதம்பரனார் முன்னின்றார், புதிய தான
செயல் செய்தார், எதிர்நீச்சல் கற்றி ருந்தார்!
நிதமந்த சிதம்பரனார் வீரத்தையும்

நிலம் மீட்க அவர்பட்ட பாட்டினையும்
இதமான விடுதலையின் இனிமை யையும்
எழுச்சிக்கு அவர் கொடுத்த விளக்கத் தையும்
மதித்திருப்போம்! நினைத்திருப்போம்' மக்கள் வாழ்வு
மலர்வதற்கும் மணப்பதற்கும் தொண்டு செய்வோம்.

———

## தலைவர் முடிவுரை

சிறை வாழ்ந்தார்.... செக்கிழுத்தார் - இந்தத்
தரையாண்ட வெள்ளையரை விரட்டுதற்குக்
குறை ஆயுள் பெற்று பலர் கொலையும் உண்டார்
உறை மீறி வெளிவந்த கத்திபோல
உயிர்மீது ஆசையின்றிப் போர் புரிந்தார்,
அவர் பெருமை கூறுதற்கு
அணிவகுத்த இந்த நாளில்
விடுதலைக்கு உயிரீந்த
எவர் பெருமை கூறுதற்கும்
இவர் போலக்
கவி வளத்தைப் பெற்றேனில்லை
கவிதை பாடக் கற்றேனில்லை.
தலையறுத்த வீரர் கதை பாடுவதால்
தலை யகற்றிப் பாடுகின்றேன் நானும்!- அவர்
தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்
தொடை தட்டும் என் பாட்டும். என் கவிதை,
யாப்பின்றிப் போனாலும் போகட்டும் - நம்நாடு
மொழி, மானம் உணர்வெல்லாம்,
காப்பின்றிப் போதல்கூடாதெனும் கொள்கை யொன்றால்
வாய்ப்பின்றிப் போனாலும் செய்யுள் கற்கக்
காய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல் - நெஞ்சில்
ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கிக் கொள்கை
மாறுகின்ற கோடரிகள் உணர்வதற்கு ஒன்று சொல்வேன்
எத்தனை உயிர்கள்
எத்தனை ரத்தம்
நித்தமும் தந்து பெற்றது விடுதலை

இத்தரை குடைந்து மெத்தவும் உழன்று
பத்தரை மாற்றைப் பெற்றபின் அதனைக்
கைத்திறம் காட்டி அணிநகை பூட்டிச்
சித்திரப் பெண்டிர் களித்திட லின்றிக்
குப்பைக் குழியில் போடுதல் நன்றோ ?
புட்கள் கூவிடும் சோலையின் நடுவே
முட்கள் கீறிடப் பறித்த நல்ரோசா
கூட்கம் ஏந்திய வீரர் முடியில்
வெட்கம் ஏந்திய மாதர் குழலில்
இருந்திடல் மணமா ?
குட்டம் கொண்டோன் குறுகிய கையில்
கொடுத்திடல் நலமா ?
பெற்ற சுதந்திரம் பேணிக் காப்போம்
பெற்ற மறவர்க்குப் பெருமைகள் சேர்ப்போம்
உற்றார் - சுற்றம் ஒருவர் - இருவர்
உயர்வுடன் வாழ்தல் சுதந்திரம் ஆமோ ?
கற்றார் - கல்லார் - கழனியில் உழல்வோர்
சிற்றார் - கொல்லர் - சிறுதொழில் செய்வோர்
மாதர் நல்லார் மாணவமணிகள்
தீதறு வாழ்வில் திளைத்தலே சுதந்திரம்.
இந்தக் கொள்கை இனிது விளங்க
மந்தக் கொள்கை பாய்ந்து விலக
சந்தத் தமிழ் ஒலிப்போம் இன்று
தங்கக்குன்றே! தமிழே! தாயே! உன்
சிங்கப் புதல்வரின் சிறப்பினைச் சொன்னோம்
எங்கும் தமிழகம் வெற்றி விளைத்திட
இங்கு நீ எமக்கே அருள்வாய் அம்மா.

வணக்கம்!

வாழ்க!!

# வரலாற்று நூல்கள்

❋

நாட்டு விடுதலைக்கு உழைத்த வீரர்கள் பலரின் வரலாறுகள் கழக வழி வெளிவந்துள்ளன. அவற்றுள் சில இன்றியமையா நூல்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| **பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள்** | —*புலவர் அரசு* | *1* | *00* |
| **வீர சிதம்பரனார்** | ,, | *1* | *00* |
| **உரிமைக் கவிஞர் பாரதியார்** | ,, | *1* | *00* |
| **முதல் குடியரசுத் தலைவர்** | —*அ. க. நவநீதகிருஷ்ணன்* | *1* | *25* |
| **முதலமைச்சர் காமராசர்** | ,, | *1* | *50* |
| **சர்தார் வல்லபாய் படேல்** | —*புலவர் அரசு* | *0* | *87* |
| **வங்க வீரர் சுபாஷ் சந்திரபோஸ்** | ,, | *0* | *75* |
| **திலகர், கோகலே** | ,, | *1* | *00* |

---

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி–6. : : சென்னை–1.

# கோபால கிருஷ்ண கோகலே

ஆசிரியர் :

மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி. எல்.

அறிஞர் கோபாலகிருஷ்ண கோகலே இந்தியாவின் விடுதலை வீரர்களுள் ஒருவராக மட்டுமன்றி, மாணவர்கட்கும், கல்விப்பணியில் ஈடுபட்டுள்ளோர்க்கும் நல்லதொரு வழிகாட்டியாக விளங்கியவர். அவர்தம் வரலாறு கல்வியின் ஆற்றலையும், நாட்டுப் பற்றின் சிறப்பினையும் தூய்மையின் மேன்மையினையும், தொண்டின் பெருமையினையும் உணர்த்துகின்றது. இவ்வரலாற்றினை, மாணவருலகம் படித்துப் பயன்பெறும் வகையில் இனிய தமிழ்நடையில் எழுதியுள்ளார் இந்நூலாசிரியர். பத்தொன்பது தலைப்புக்களில் வரலாறு பாங்குற அமைந்துள்ளது. பயனுள்ள நூல்.

விலை ரூ. 1 20

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. :: சென்னை-1.